Registered as a news paper.
பக்கங்கள்: பத்து
விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2033 புரட்டாதி 29 ஆம் நாள் (15.10.2002) செவ்வாய்க்கிழமை இதழ் : 15

THAMPI links with LIONAIR
50 நிமிடங்களில் கொழும்பு/யாழ்.!
Tickets Available For RS. 1999/-
மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்....
01-343125, 021-2222040, 2222504, 2222823
Hotline - 0777-382343, 072-401423.
(சி-052)

வெளிநாட்டு எம்.பிக்களுடன் சென்றபோது சம்பவம்

## ஹாட்லிக்குள் செல்லவிடாது புலிகளைத் தடுத்த படையினர்!


(வடமராட்சி)

பருத்தித்துறையிலுள்ள ஹாட்லிக் கல்லூரிக்கு விஜயம் செய்த ஐரோப்பிய யூனியன், பிரிட்டிஷ் எம்.பிக்களுடன் சென்ற, விடுதலைப்புலிகளின் வடமராட்சிப் பகுதிக்கான விசேட அரசியல் பொறுப்பாளர் நிசாந்தனும், தயாவும் கல்லூரி வாசலிலிருக்கும் காவலரணில் வைத்துப் படையினரால் தடுக்கப்பட்டனர்.

தாம் விடுதலைப்புலிகள் இயக்க உறுப்பினர்கள் எனத் தம்மை அடையாளம் காட்டிய பின்பும் படையினர் இவர்களை உள்ளே செல்லவிடாது தடுத்துள்ளனர்.

(10ஆம் பக்கம் பார்க்க)

விண்ணாணம் விநாசியர்



இப்பிடி எத்தின காணாமப் போய் எந்தெந்த இருட்டுக்குள்ள கிடக்குதுகளோ...!

## கெய்ரோ கடூழியச் சிறைகளில் வாடும் பத்து ஈழத் தமிழர்கள்

### 18 வருடங்களின் பின் ஒருவர் வீட்டுக்குக் கடிதம் அனுப்பினார்

(கொழும்பு நிருபர்)

எகிப்தின் தலைநகரான கெய்ரோவில் - இதுவரை காலமும் வெளித் தெரியாவண்ணம் 10 ஈழத் தமிழர்கள் கடூழியச் சிறைகளில் வாடிவருவது தெரியவந்துள்ளது.

1985ஆம் ஆண்டளவில் - போதைவஸ்துக் கடத்தலுக்காகக் கெய்ரோவில் 18 வருட கால கடூழியச் சிறைவாசத்தை அனுபவித்துவரும் நீர்வேலி வாசியொருவர் - தனது வீட்டாருக்கு 18 வருடங்களின் பின் எழுதிய முதலாவது கடிதத்திலேயே இந்த விபரம்

(10ஆம் பக்கம் பார்க்க)

# அதி உயர் பாதுகாப்பு வலயங்கள் உடனடியாக அகற்றப்படமாட்டாது!

### யாழ். மாவட்ட துணை ராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் இரட்ணசபாபதி

(யாழ்ப்பாணம்)

**யாழ்.மாவட்டத்தில் உள்ள அதிஉயர் பாதுகாப்பு வலயங்கள் எதுவும் தற்போதைய நிலையில் அகற்றப்பட மாட்டாது. தற்போதுள்ள உயர் பாதுகாப்பு வலயங்கள் அனைத்தும் தொடர்ந்தும் மாற்றம் எதுவும் இன்றி உயர் பாதுகாப்பு வலயங்களாகவே பேணப்படும். இவ்வாறு யாழ்.மாவட்ட துணை இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் இரட்ணசபாபதி தெரிவித்துள்ளார்.**

பலாலி இராணுவ முகாமில் நேற்றுக்காலை தம்மைச் சந்தித்த பிரித்தானியப் பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பினர் ஆகியோருடன் மேற்படி விடயம் தொடர்பாகப் பேச்சுவார்த்தை நடாத்தும்போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். பிரிட்டனின் தொழிற்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினரான ஹரத் தோமஸ் மற்றும், ஐரோப்பியப் பாராளுமன்ற உறுப்பினரான றொபேட் ஈவன்சனை ஆகியோர் யாழ். மாவட்ட துணை இராணுவத் தளபதியைப் பலாலி இராணுவத் தளத்தில் நேற்றுக்காலை 9.30 மணியளவில் சந்தித்தனர். இச் சந்திப்பின்போது முக்கியமாக யாழ். குடாநாட்டில் தற்போது உயர்பாது

(10ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத்துக்கு ஆட்திரட்டல் நாளை முதல் ஆரம்பம்

(கொழும்பு)

இலங்கை ராணுவம் ஆட்திரட்டல் நடவடிக்கைகளை மீள ஆரம்பித்துள்ளது. புதிதாக ராணுவத்தில் சிப்பாய்களைச் சேர்த்துக் கொள்வதற்கு ராணுவத் தலைமையகம் நடவடிக்கை எடுத்திருக்கின்றது.

நாடு முழுவதிலும் உள்ள சகல ராணுவ முகாம்களிலும் படைகளுக்கு ஆட்களைத் திரட்டும் பணி இடம்பெறவுள்ளது. நாளை 16ம்திகதி முதல் ஒருமாத காலத்திற்கு இந்த ஆட்திரட்டல் நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

18 வயதுக்கும் 24 வயதுக்கும் இடைப்பட்ட எட்டாம் வகுப்புச் சித்தியடைந்தவர்கள் அருகிலுள்ள

(10ஆம் பக்கம் பார்க்க)

## உரிமைக்காக முஸ்லிம்களும் குரலெழுப்ப வேண்டியுள்ளது

### அமைச்சர் ஹக்கீம் கூறுகிறார்

(கொழும்பு நிருபர்)

முஸ்லிம்களால் இன்றைய சமாதானம் குழம்பக்கூடாது என நான் இதுவரை சொல்லி வந்ததை வாபஸ் பெறுகின்றேன். முஸ்லிம்களும் தமது உரிமைக்காகக் குரலெழுப்ப வேண்டியுள்ளது என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்

முஸ்லிம் மீடியா போரத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் பேசும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து பேசும்போது - கிழக்கில் இன்றும் முஸ்லிம்கள் பாதிக்கப்படுகின்றார்கள். தமிழர்களுடைய போரட்டத்தை முஸ்லிம்கள் கொச்சைப்படுத்துகிறார்கள் எனத் தமிழர் தரப்பில் கூறப்படுகின்றது. கொச்சைப்படுத்துதல் எனக் கூறுவது தவறு. வேண்டுமென்றால் பாதிக்கிறார்கள் என்று கூறட்டும். பாதிப்பு இல்லாமல் முஸ்லிம்களுககு சமாதானம் கிடைக்காது.

முஸ்லிம் காங்கிரசிலிருந்து 9 பாராளுமன்ற உறுப்பினர்கள் - முஸ்லிம்களுக்கான தனி அலகு என்ற விடயத்தை வலியுறுத்திப் பாராளு

(10ஆம் பக்கம் பார்க்க)

## உயர் பாதுகாப்பு வலய விவகாரம் ஒப்பந்தப்படியே அணுகவேண்டும்

### கண்காணிப்புக் குழுத் தலைவர் கருத்து

(கொழும்பு)

உயர்பாதுகாப்பு வலயம், பொதுக் கட்டடங்களிலிருந்து ஆயுதப் படைகள் வெளியேறுதல், ஆயுதமேந்திய துணைப்படைகள் ஆகியன தொடர்பான விடயங்களில் போர்நிறுத்த உடன்பாட்டின் அடிப்படையில் வேலைத்திட்டங்களினூடாக முன்னேற வேண்டும் என இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் றொண்ட் புரூவ் ஹொவ்டே தெரிவித்துள்ளார்.

கொழும்பிலிருந்து வெளிவரும் ஆங்கில ஊடகமொன்றுக்கு அளித்த பேட்டியில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

காஞ்சிரங்குடாத் தாக்குதல்கள் போன்ற அசம்பாவிதங்களில் விடுதலைப் புலிகளின் தலைமை சம்பந்தப்பட்டிருக்கும் எனக் கூறப்படுவதில் தனக்கு நம்பிக்கை இல்லை எனவும் புரூவ் ஹொவ்டே தெரிவித்தார்.

## இராணுவ முகாமுக்குள் பாடசாலைகள்; எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது!

### வடமராட்சி வந்த ஐரோப்பிய யூனியன், பிரிட்டிஷ் எம்.பிக்கள் வியப்பு

(வடமராட்சி)

வடமராட்சியின் முன்னணிப் பாடசாலைகள் இரண்டு - இராணுவ முகாம் ஒன்றுக்குள் இயங்குவதை ஏற்றுக்கொள்ள முடியாது என நேற்று வடமராட்சிக்கு விஜயம் செய்த ஐரோப்பிய யூனியன் மற்றும் பிரிட்டிஷ் பாரளுமன்றக் குழு உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

ஐரோப்பிய யூனியன் பாரளுமன்றக் குழு உறுப்பினரான றொபேட்

(10ஆம் பக்கம் பார்க்க)

## பாலா இன்று வருவார்? றொய்ட்டர் தகவல்!

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவ ஆசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம் இன்று காலை கொழும்புக்கு வரவிருப்பதாக றொய்ட்டர் தெரிவித்தது.

கொழும்பு வந்தடைந்ததும் இன்றைய தினமே கொழும்பில் இருந்து விமானப் படை ஹெலிகொப்டர் ஒன்றில் அவர் வன்னிக்குப் பயணமாகவுள்தாகவும் அன்ரன் பாலசிங்கத்துடன் அமைச்சர் மிலிந்த மொறகொடவும் விமானப்படையின் ஹெலிகொப்டர் மூலமாக வன்னிக்குப் பயணஞ் செய்யவுள்ளதாகவும் றொய்ட்டரின் உத்தியோகபூர்வ இணையத்தளம் தெரிவித்தது.

## புலிகள் மீதான பிரிட்டிஷ் தடையை நீக்க ஐரோப்பிய யூனியன் முயல வேண்டும்!

### யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகளே தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகள், வடக்கு கிழக்குப் பகுதி முழுவதும் தமிழ் மக்களின் தாயகம், இந்த யதார்த்தத்தை சர்வதேச சமூகம் உணர்ந்து கொள்ள வேண்டும் இவ்வாறு யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகள் நேற்று தம்மைச் சந்தித்த ஐரோப்பியப் பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் பிரித்தானியப் பாராளுமன்ற உறுப்பினர் ஆகியோரிடம் எடுத்துக் கூறியுள்ளனர்.

நேற்று நண்பகலுக்குப் பின்னர் நடைபெற்ற மேற்படி சந்திப்பின் போது- பல்கலைக்கழக மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகள் மேலும் தெரிவிக்கும் போது - இன்றைக்கு மட்டுமல்ல என்றைக்குமே விடுதலைப்புலிகள்தான் தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள். தமிழ் மக்களையும் விடுதலைப் புலிகளையும் வேறு வேறாகப் பிரித்துப் பார்க்க முடியாது. தமிழர்களும் புலிகளும் ஒன்றோடொன்று பிரிக்கப்பட முடியாதவர்கள். இந்த யதார்த்தத்தை சர்வதேச சமூகம் உணர்ந்து கொள்ளவேண்டும்.

மேலும்- பிரித்தானிய அரசாங்கம்

(10ஆம் பக்கம் பார்க்க)

# யாழ்.வைத்தியசாலை டாக்டர்களுக்கு ரெலிகொம் பாரபட்சம் காட்டுகின்றது!

## பத்திரிகையாளர் மாநாட்டில் குற்றச்சாட்டு

(நமது நிருபர்)

யாழ் போதனா வைத்தியசாலையில பணிபுரியும் வைத்தியர்களுக்கு தொலைபேசி இணைப்புக்களை முன்னுரிமை அடிப்படையில் வழங்குவதில்லை என யாழ்ப்பாண அரசாங்க மருத்துவர்கள் சங்கம் குற்றம் சாட்டியுள்ளது.

நேற்று இச்சங்கம் நடாத்திய பத்திரிகையாளர் சந்திப்பிலேயே மேற்படி குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது.

நேற்றுக்காலை 11 மணியளவில் வைத்தியசாலையில் மேற்படி சங்கம் பத்திரிகையாளர் சந்திப்பொன்றை நடத்தியது. இதில் வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சதுர்முகனும் அரசாங்க மருத்துவர்கள் சங்கத்தின் யாழ்ப்பாணக் கிளையின் செயலாளா வைத்திய கலாநிதி எஸ்.குமரவேளும் சங்கத்தின் பொருளாளர் வைத்திய கலாநிதி கே.சுரேஸ்குமாரும் கலந்து கொண்டனர்.

இச்சந்திப்பில் மருத்துவ சங்கச் செயலாளர் வைத்திய கலாநிதி எஸ். குமரவேள் மேலும் தெரிவிக்கையில்- சிறிலங்கா ரெலிக்கொம் யாழ்.மாவட்டத்தில் பணிபுரியும் அரசாங்க வைத்திய அதிகாரிகளுக்கு தொலைபேசி இணைப்புக்களை வழங்க மறுக்கின்றதெனவும் ஓர் வியாபாரிக்கு இருபது இணைப்புக்களை வழங்க முடியுமென்றால் மக்களுக்காகப் பணிபுரியும் எமக்கு முன்னுரிமை அடிப்படையில் தொலைபேசி இணைப்புக்களை ஏன் வழங்க முடியாது எனவும் கேள்வி எழுப்பினார்.

அத்துடன் தென்பகுதி மாவட்டங்களில் வைத்தியர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு தொலைபேசி இணைப்புக்கள் வழங்கப்படுகின்றன. ஆனால் யாழ்ப்பாணத்தில் இவ்வாறு வழங்கப்படுவதில்லை எனவும் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் அறிக்கை ஒன்றையும் வெளியிட்டார். அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

யாழ்ப்பாணத்திலுள்ள சிறீலங்கா ரெலிகொம் யாழ். மாவட்டத்தில் பணிபுரியும் அரசாங்க வைத்திய அதிகாரிகளுக்கு முன்னுரிமைக்கான மேலதிக கட்டணம் இன்றி முன்னுரிமை அடிப்படையில் தொலைபேசி இணைப்புக்களை வழங்க மறுக்கின்றது. வைத்திய நிபுணர்களின் வீடுகளுக்கான உத்தியோகபூர்வ இணைப்புக்களையும் வைத்திய அதிகாரிகளுக்குரிய தனிப்பட்ட இணைப்புக்களையும் முன்னுரிமை அடிப்படையில் குறிப்பாக சாதாரண கட்டணத்துடன் வழங்குமாறு எமது சங்கம் கோரியது. அதற்குப் பதிலாக முன்னுரிமைக் கட்டணமாக ரூபா 12000ஐ மேலதிகமாகச் செலுத்தி இணைப்பைப் பெற்றுக் கொள்ளுமாறு கூறுகின்றனர்.



பத்திரிகையாளர் சந்திப்பில் வைத்தியசாலைப்பணிப்பாளர் வைத்திய கலாநிதி சதுர்முகனும், மருத்துவர்கள் சங்க யாழ்.கிளையின் பொருளாளர் வைத்திய கலாநிதி கே.சுரேஸ்குமாரும், செயலாளர் வைத்திய கலாநிதி எஸ்.குமரவேளும். *(படம்: தே.லிவிங்ஸ்டன்)*

வைத்திய சேவை ஒரு உயிர் காக்கும் சேவையாகும். உயிர்களை காப்பாற்றும் போராட்டத்தில் ஒவ்வொரு நிமிடமும் பொன் போன்றது. ஒரு நாளின் 24 மணிநேரமும் நோயாளி பராமரிக்கப்படவேண்டும். அதனால் வைத்தியர்கள் நாள் முழுவதும் பணிபுரிகிறார்கள்.

வைத்திய அதிகாரிகளை கடமை நேரத்தின் பின்னரும் கூட அவசர தேவைகளுக்காக தொடர்புகொள்ள அல்லது அழைக்கவேண்டி நேரிடுகிறது. அவசர நிலைமைகளில் நடுநிசி வேளைகளில் கூட உள்ளகப் பயிற்சி வைத்தியர்கள் வைத்திய நிபுணரின் ஆலோசனையைப் பெற்றுக்கொள்ள வேண்டி ஏற்படுகிறது. இந்த வேளைகளில் தொலைபேசி பேருதவி புரியும். மருத்துவத் துறையில் தொலைபேசி தொடர்பாடல் அத்தியாவசியமாக ஒன்றாகும்.

எனவேதான் அரசாங்கம் வைத்திய நிபுணர்களின் வீடுகளுக்கு உத்தியோகபூர்வ தொலைபேசி இணைப்புக்களை வழங்கி அதற்கான கட்டணத்தையும் வழங்குகின்றது. யாழ்ப்பாணம் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் அரசாங்க வைத்திய அதிகாரிகள் அனைவருக்கும் தொலைபேசி இணைப்புக்கள் முன்னுரிமை அடிப்படையில் (மேலதிக கட்டணம் எதுவுமின்றி) வழங்கப்படுகின்றன. ஆனால் யாழ்ப்பாணத்தில் உள்ள சிறீலங்கா ரெலிகொம் யாழ். மாவட்டத்தில் பணிபுரியும் வைத்தியர்களுக்கு ஏனைய இடங்களைப் போல முன்னுரிமை அடிப்படையில் தொலைபேசி இணைப்புக்களை வழங்க மறுக்கின்றது.

ஏற்கனவே இங்கு 3000 தொலைபேசி இணைப்புக்கள் வழங்கப்பட்டிருந்தன. தற்போது தொலைபேசி இணைப்புக்களின் எண்ணிக்கை மேலும் 3000 ஆல் அதிகரிக்கப்பட்டுள்ளன. இதன் பின்பே வைத்தியர்களாகிய எமக்கு எமது சேவையை மேம்படுத்துவதற்காகவே முன்னுரிமை அடிப்படையில் மேலதிக கட்டணமின்றி இணைப்புக்களை வழங்குமாறு நாம் கோரினோம்.

எமது கோரிக்கையை ஈற்றில் ரெலிகொம்மின் யாழ். அதிகாரிகளிடம் நேரிலும் முன் வைத்தோம். ஆனால் ரெலிகொம்மின் யாழ். அலுவலக அதிகாரிகள் எம் கோரிக்கையை நிராகரித்து விட்டனர். மாறாக வடக்கிற்கான ரெலிக்கொம்மின் விசேட கொள்கையின் படி அரச திணைக்களங்களின் தலைவர்களுக்குரிய அலுவலக இணைப்பை மட்டுமே மேலதிக கட்டணமின்றி வழங்க முடியுமென்று கூறினார்கள். எமது கோரிக்கையை அவர்களின் மேலதிகாரிகளுக்கு தெரிவிக்குமாறு நாம் கேட்ட போது அதற்கும் தமது தனிப்பட்ட நலன்களை காரணம் காட்டி மறுத்து விட்டார்கள்.

இந்நிலைக்கு - தொலைபேசி இணைப்புக்களுக்கு இங்குள்ள பாரிய கேள்வியுடன் ஒப்பிடுகையில் குறைவான இணைப்புக்கள் உள்ளதே காரணம் எனக்கூறப்பட்டது. சிறீலங்கா ரெலிகொம் அதிக வருமானம் பெறும் மாவட்டங்களில் யாழ்ப்பாணம் இரண்டாவது இடம் பெறுவதை நாம் இங்கு கருத்தில் கொள்ள வேண்டும். அதேவேளை இங்கு முன்னர் வழங்கப்பட்டிருந்த 3000 இணைப்புக்களிலிருந்தே இவ் வருமானத்தை ரொலிகொம் பெறுகின்றது என்பதையும் கவனிக்க வேண்டும். யாம்ப்பாணத்தை விட குறைந்த வருமானம் பெறும் இடங்களில் கூட ரெலிக்கொம் மிதமிஞ்சிய நவீன இணைப்பு வசதிகளை ஏற்படுத்தி வைத்துள்ளமையும் இங்கு முக்கியமாகக் குறிப்பிட வேண்டிய ஒன்றாகும்.

ஒரு செயற்கையான தட்டுப்பாட்டை பேணுவதன் மூலம் யாழ்ப்பாணத்தில் விலைகூடியவையான முன்னுரிமைக்கு மேலதிக கட்டணம் கட்ட வேண்டியதான அல்லது மாதாந்தம் ரூபா 1000 க்குக் குறையாமல் பாவனைக்கட்டணம் கட்ட ஒப்புக்கொள்ளும் வகையான தொலைபேசி இணைப்புக்களை மட்டும் ரெலிகொம் வழங்கி வருகிறது. இந்நடவடிக்கையானது ஏற்கனவே போரினால் பொருளாதார ரீதியில் சீரழிந்து போயுள்ள யாழ்ப்பாண மக்களை மேலும் உச்ச அளவில் சுரண்டுவதற்காக் திட்டமிடப்பட்டுள்ள ஒரு பகல் கொள்ளையாக இருக்கிறது.

இன்று ஏற்பட்டுள்ள சமாதானச் சூழ்நிலையை பயன்படுத்திப் பல நிறுவனங்கள் தமிழ் மக்களை குறிப்பாக யாழ்ப்பாண மக்களை சுரண்ட முயல்கின்றன. இவ்வகையில் ரெலிகொம் நிறுவனம் 1996இல் இருந்தே யாழ்ப்பாணத்தைச் சுரண்டி வருகினறது. இந்த வகையான சுரண்டலை நாம் வன்மையாக கண்டிக்கிறோம். அத்துடன் இவ் வகையான சுரண்டல்கள் பற்றி தமிழ் மக்கள் எப்போதும் விழிப்பாக இருக்க வேண்டுமெனவும் கேட்டுக் கொள்கின்றோம்.

ரெலிக்கொம் நிறுவனம் வைத்திய அதிகாரிகளின் தொலைபேசி இணைப்புக்கான விண்ணப்பங்களை ஏற்று சாதாரண கட்டணத்துடனேயே முன்னுரிமை அடிப்படையில் இணைபபுக்களை வழங்க வேண்டுமென நாம் கேட்டுக்கொள்கின்றோம். எமது சமூகத்தின் நலன்களில் உண்மையான அக்கறை கொண்ட பெரியோரை இந்த விடயங்களில் தலையிட்டு உரிய நடவடிக்கை எடுக்குமாறு இந்தச்சந்தர்ப்பத்தில் நாம் கோரிக்கை விடுக்கின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (லி)

## கண்டி வீதியில் அதிவேகம் கொண்டு ஒன்றையொன்று முந்தும் வாகனங்கள்!

(யாழ்ப்பாணம்)

யாழ்-கண்டி வீதியில் அண்மைக் காலமாக வீதி விபத்துச் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன.

மேற்படி வீதியில் தென்னிலங்கையிலிருந்து குடாநாட்டுக்கு வரும் வாகனங்களும் இங்கிருந்து தென்னிலங்கை நோக்கிச் செல்லும் வாகனங்களும் ஒன்றையொன்றை முந்திச் செல்ல அதிவேகத்தைக் கொள்வதும் இதற்கு ஒரு காரணம் எனக் கூறப்படுகிறது. வேகக்கட்டுப்பாட்டின் அவசியம் இந்த வகையில் வலியுறுத்தப்படுகின்றது.

இதேவேளை எஸ்.வீரசிங்கம் என்ற சிகையலங்கரிப்பாளர் ஒருவர் மோட்டார் சைக்கிள் ஒன்றினால் பந்தாடப்பட்ட சம்பவம் நுணாவில் பகுதியில் நிகழ்ந்துள்ளது.

மயக்கமுற்ற நிலையில் இவர் யாழ்.போதனாவைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டார். (12)

## சமுர்த்தி நிவாரணத் திட்டத்தின் கீழ் சிறு குழுக்கள் அமைக்கப்பட்டன

(புன்னாலைக்கட்டுவன்)

புன்னாலைக்கட்டுவன் தெற்கு (J/207) கிராமசேவகர் பிரிவுக்குட்பட்ட நிரந்தர, தற்காலிக 'இ' பங்கீட்டு அட்டை உடையோரை உள்ளடக்கி பன்முகப்படுத்தப்பட்ட சமுர்த்தி நிவாரண உதவித்திட்டத்தின் கீழ் சிறுகுழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மேற்படி குழுக்கள் நேற்று முன்தினம் காலை 10 மணியளவில், இப்பிரிவு சமுர்த்தி உத்தியோகத்தர் தலைமையில் உருவாக்கப்பட்டுள்ளன. இங்கு 37 சிறுகுழுக்கள் ஆரம்பித்து வைக்கப்பட்டது. ஒவ்வொரு குழுவும் ஐந்து அங்கத்தவர்களைக் கொண்டது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (83)

## கடைக்காரரை அறிவுறுத்திய சுகாதார பரிசோதகர் தாக்கப்பட்டார்!

(வடமராட்சி கிழக்கு)

பருத்தித்துறை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பருத்தித்துறையில் வைத்து கடுமையாக தாக்கப்பட்டு மந்திகை அரசினர் வைத்தியசாலையில் அடி காயங்களுடன் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பருத்தித்துறையைச் சேர்ந்த சிவநிதி எனபவரே காயமுற்றவராவர். வல்வெட்டித்துறையிலுள்ள றொட்டிக் கடை ஒன்றுக்கு சென்ற சுகாதார பரிசோதகர் கடைச் சொந்தக்காரர்களுக்கு சில அறிவுறுத்தல்களை கூறினார்.

இச்சம்பவத்தின் பின்னர் அன்று மாலை கடைச்சொந்தக்காரரும் அவருடைய சினேகிதரும் சுகாதார பரிசோதகரை கடுமையாக தாக்கினர். காயமுற்றவர் மந்திகை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இது சம்பந்தமாக வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (17)

## நல்லின தென்னம் நாற்றுக்கள்

சாவகச்சேரி கமநல சேவை நிலையத்தின் விவசாய சம்மேளனத்தின் ஊடாக இலவச தென்னங்கன்றுகள் வழங்கப்படவுள்ளன.

இதற்காக குருநாகலில் இருந்து 5000 நல்லின தென்னம் நாற்றுக்கள் எடுத்துவரப்பட்டுள்ளன. (25)

## வரணியில் திருட்டு

இரவு வேளை வீட்டினுள் புகுந்த திருடர் கோஷ்டியொன்று அங்கிருந்து நீர் இறைக்கும் இயந்திரம் மற்றும் மிதிவண்டி என்பவற்றை அபகரித்துச் சென்றுள்ளனர்.

இத்துணிகரச் சம்பவம் வரணி வடக்கில் உள்ள சின்னக்குட்டி பொன்னம்பலம் எனபவரது வீட்டிலேயே இடம் பெற்றது. (27)

## ஆனைக்கோட்டை ஆலய உண்டியல்களில் திருட்டு

ஆனைக்கோட்டை கரைப்பிரான் பிள்ளையார் ஆலயத்தில் ஏழு உண்டியல்கள்- நேற்று முன்தினம் பகல்வேளையில் உடைக்கப்பட்டு அவற்றுள் இருந்த பணம் அபகரிக்கப்பட்டுள்ளது.

(46)

## பாடசாலை நூலக தினம்

சர்வதேச பாடசாலை நூலக தினம் ஒக்டோபர் 28ஆம் திகதி இலங்கையில் உள்ள சகல பாடசாலைகளிலும் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளை கல்வி அமைச்சின் நூலக பெருவளர்ச்சி அலகு மேற்கொண்டு வருகின்றது.

பாடசாலைகளில் நூலக வளர்ச்சியை ஏற்படுத்துவதற்கும், மாணவர்களின் வாசிப்புத் திறனை விருத்தி செய்வதற்குமான செயற்திட்டங்களை கல்வி அமைச்சு சகல பாடசாலைகளிலும் அறிமுகப்படுத்தவுள்ளது குறிப்பிடத்தக்கது.

## அருட்கவியின் கீர்த்தனை நூலும் ஒலிநாடாவும் வெளியீடு

அருள் ஒளி கீர்த்தனை நூலும் ஒலிப்பதிவு நாடாவும்- வெளியீடு செய்யும் வைபவம் 20 ஆம் திகதி, ஞாயிற்றுக்கிழமை பி.ப.3.00 மணிக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறவுள்ளது.

அருட்கவி சி.விநாசித்தம்பி ஆக்கிய நூலிற்கான ஒலிப்பதிவு பாடலை தென்னிந்தியப் பாடகர் மலேசியா வாசுதேவன் பாடியுள்ளார்.

பேராசிரியர் அ.சண்முகதாஸின் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் வெளியீட்டுரையை பேராசிரியர் பொன்.பாலசுந்தரம்பிள்ளையும் ஆய்வுரையை சபா.ஜெயராசாவும் நிகழ்த்தவுள்ளனர்.

## ஊரெழு வித்தியாலயத்தில் விஜயதசமி

(ஊரெழு)

ஊரெழு கணேசா வித்தியாலய விஜயதசமி விழா இன்று செவ்வாய்க் கிழமை காலை 9 மணிக்கு மேற்படி பாடசாலை வழிபாட்டு மண்டபத்தில் இடம்பெறும். விசேட பூஜை வழிபாடுகளைத் தொடர்ந்து ஆயுத பூஜையும் அதனைத் தொடர்ந்து ஏடு தொடக்கும் வைபவமும் இடம் பெறவுள்ளது.

தொடர்ந்து மாணவர்களது கலை நிகழ்ச்சிகள் இடம்பெறும்.(96)

## நவராத்திரி விழா

(ஊரெழு)

பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை ஆசிரிய மாணவர்கள் நடாத்தும்- நவராத்திரி விழா இன்று காலை 10.30 மணிக்கு கலாசாலை ஆலய மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

(96)

## நவராத்திரி தின சமய அறிவுப் போட்டி முடிவுகள்

யா/கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாசாலை, யா/அரியாலை கிழக்கு அ.த.க பாடசாலை, யா/பூம்புகார் அ.த.க.பாடசாலை ஆகிய மூன்று பாடசாலைகள் இணைந்து நடாத்திய நவராத்திரி தின சமய அறிவுப் போட்டி முடிவுகள் பின்வருமாறு :

*மாணவர்களுக்கான போட்டி முடிவுகள்.*

**1ஆம்இடம்**- செல்வி.பா.ஸ்ரீரூபா (தரம்9)
(யா/அரியாலை கிழக்கு அ.த.க பாடசாலை)

**2ஆம்இடம்**-செல்வன். சி.அமல்ராஜ் (தரம்7)
(யா/பூம்புகார் அ.த.க பாடசாலை)

**3ஆம்இடம்**- செல்வி. கு.யாழினி (தரம்4)
(யா/கந்தர்மடம் சைவப் பிரகாச வித்தியாசாலை)

*ஆசிரியர்களுக்கான போட்டி முடிவுகள்.*

**1ஆம்இடம்**-திருமதி. ர.பேரின்பநாதன் (ஆசிரியை)
(யா/கந்தர்மடம் சைவப் பிரகாச வித்தியாசாலை

**2ஆம்இடம்**-திரு.க.கௌரிஹரசன் (ஆசிரியர்)
(யா/பூம்புகார் அ.த.க.பாடசாலை)

**3ஆம்இடம்**-திருமதி. கு.உருத்திரகுமாரன் (ஆசிரியர்)
(யா/கந்தர்மடம் சைவப் பிரகாச வித்தியாசாலை)

மேற்படி போட்டிக்கான பரிசில்கள் யாவும் இன்று நடைபெறவுள்ள வாணி விழாவின் போது வழங்கப்படவுள்ளன.

## வாணி விழா

திருநெறிய தமிழ்மறைக்கழகம் நடாத்தும் வாணிவிழா இன்று செவ்வாய்க்கிழமை இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் கோயில் கல்யாண மண்டபத்தில் நடைபெறும். மற்றும் வில்லுப்பாட்டு, நடன நிகழ்வு, கோலாட்டம், பொம்மலாட்டம், இசைக்கச்சேரி, பக்திப்பாடல்கள் என்பன சிறப்பு நிகழ்ச்சிகளாக இடம்பெறவிருக்கின்றன. (88)

❑ ❑ ❑ ❑

(வடமராட்சி கிழக்கு)

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையின் வாணி விழாவும் சரஸ்வதி பூசையும் இன்று செவ்வாய்க்கிழமை இந்து மன்றத் தலைவி சி.தாரணி தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக இளைப்பாறிய நீதிபதி திரு.என்.திருநாவுக்கரசு கலந்து கொள்வார்.

(17)

# ரயில் கட்டணங்கள் 60 சதவீதம் உயரும்!

(கொழும்பு நிருபர்)

அடுத்த இரண்டு மாதத்திற்குள் ரயில் கட்டணங்கள் 60 சதவீதத் தால் உயர்த்தப்படவுள்ளதாக போக்குவரத்துத்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ரயில் கட்டணங்களை உயர்த்துவதற்கான அனுமதியை பெறுவதறகு அமைச்சரவையிடம் போக்குவரத்து அமைச்சர் நடவடிக்கை எடுத்துள்ளார். இந்த அனுமதி கிடைத்ததும் அடுத்த இரண்டு மாதங்களில் ரயில் கட்டணங்கள் 60 சதவீதத்தால் உயரும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்த கட்டண உயர்வை எந்தவகையிலும் தவிர்க்கமுடியாது எனத் தெரிவித்துள்ள அவர் - ரயில்சேவைகளை நடத்துவதற்கு அரசாங்கம் அதிக நிதியை ஒதுக்கி வந்ததாகவும், தற்போதைய நிலையில் அவ்வுதவியை வழங்கமுடியாதிருப்பதால் கட்டணத்தை அதிகரிப்பதைவிட வேறுவழி ஏதுமில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

# புத்தளத்திற்கு கடற்றொழிலுக்குச் சென்ற தமிழ் மீனவர்கள் விரட்டியடிக்கப்பட்டனர்!

(மட்டக்களப்பு நிருபர்)

புத்தளம் பகுதியில் வாடி அமைத்து மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருந்த மட்டக்களப்பைச் சேர்ந்த தமிழ் மீனவர்கள் அப்பகுதியிலுள்ளவர்களால் அடித்து விரட்டப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது, புத்தளம் மாவட்டத்திலுள்ள கண்ணொடுவப்பகுதியில் வாடியமைத்து மீன்பிடித்து வந்த மீனவர்கள் கடந்த வியாழனன்று இரவு இனந்தெரியாவர்களால் தாக்கி விரட்டப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பைச் சேர்ந்த பன்னிரெண்டு மீனவர்களும் இரவிரவாக அப்பகுதியில் இருந்து தப்பி ஓடியுள்ளனர். இவர்களில் பதினொருபேர் மட்டக்களப்பைச் சென்றடைந்துள்ள போதும் நேற்று மாலைவரை ஒருவர் பற்றிய தகவல் கிடைக்கவில்லை.

அவர் தற்போது எங்கு இருக்கிறார் என்பதை அறிய முடியாமல் இருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# 1994இற்குப் பின் சேர்த்த சொத்துக்கள்; பாராளுமன்றிடம் மறைத்தார் ரத்வத்த!

(கொழும்பு)

முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தையின் சொத்து விபரங்களைத் தமக்குச் சமர்ப்பிக்குமாறு பாராளுமன்றச் செயலாளர் நாயகத்திடம் லஞ்சஊழல் ஆணைக்குழுவிடுத்த கோரிக்கைக்கு இதுவரை பதில் அனுப்பப்படவில்லை எனத் தெரிய வருகின்றது.

ஆறு வங்கிகளில் வைப்புப் பெட்டகங்களில் வைக்கப்பட்டிருந்த வைப்புச் சான்றிதழ்களை லஞ்ச ஊழல் திணைக்கள அதிகாரிகள் கண்டுபிடித்திருந்தனர். ஜெனரல் ரத்வத்த அமைச்சராக இருந்த காலப் பகுதியில் சட்டத்துக்குப் புறம்பாக சம்பாதிக்கப்பட்ட பணமே வைப்புச் சான்றிதழ்களில் முதலிடப்பட்டிருந்ததாகச் சந்தேகிக்கப்படுகின்றது.

இதையடுத்து விசாரணைகளைத் துரிதப்படுத்தியுள்ள லஞ்ச ஊழல் ஆணைக்குழு, தற்போதும் பாராளுமன்ற உறுப்பினராக உள்ள ஜெனரல் ரத்வத்தவின் சொத்து விபரங்களைத் தமக்குச் சமர்ப்பிக்குமாறு பாராளுமன்ற சபாநாயகரைக் கோரியிருந்தது.

சபாநாயகர் இதற்கான அனுமதியை வழங்கியுள்ளபோதும் பாராளுமன்றச் செயலாளர் பிரியாணி விஜயசேகர இதுவரையில் சொத்து விபரங்களைக் கையளிக்கவில்லை.

இதற்கு பாராளுமன்றத்துக்கு ஜனாதிபதி செயலகத்தால் வழங்கப்பட்டுள்ள சொத்து பற்றிய தகவல்கள் தொடர்பான பக்ஸ் பிரதியில் சொத்துக்கள் குறித்த 1994 ஆம் ஆண்டு விபரங்களே உள்ளடக்கியிருக்கின்றன.


ஜெனரல் ரத்வத்த அமைச்சராகப் பொறுப்பேற்க முன்னர் வழங்கப்பட்ட சொத்து விபரச்சான்றிதழில் வைப்புச்சான்றிதழ்கள் தொடர்பான விபரங்கள் இல்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஜனாதிபதி செயலகம் 1994 இற்குப் பின்னர் சொத்து விபர அறிக்கையை பாராளுமன்றச் செயலாளருக்கு அனுப்பிவைக்கவில்லை என்பதாலேயே தாம் லஞ்சஊழல் ஆணைக்குழுவுக்கு அந்த விபரத்தை அனுப்பி வைக்க முடியாத நிலையில் இருப்பதாக பாராளுமன்றச் செயலாளர் நாயகம் பிரியாணி விஜயசேகர தெரிவித்திருக்கின்றார்.

# வெள்ளைப்பிரம்பு தினம்; வாழ்வகத்திலும் நிகழ்வு!

(வலி.வடக்கு)

உலகளாவிய ரீதியில் கொண்டாடப்படும் விழிப்புலன் வலுவிழந்தோருக்கான வெள்ளைப்பிரம்பு தினம மருதனார்மடம் விழிப்புலன் வலுவிழந்தோர் வாழ்வகத்தில் இன்றுமுதல் எதிர்வரும் 20 ஆம் திகதி வரை



கொண்டாடப்படவுள்ளது.

குடாநாட்டில் கடந்த காலத்தில் நிலவிய அசாதாரண சூழ்நிலைகளாலும், இயற்கையாகவும் பார்வையில் குறைபாடு ஏற்பட்ட 30 பேருக்குக் கைகொடுத்து உதவும் இவ்வாழ்வகத்திற்கென - வடக்கு மீள்குடியேற்ற புனர்வாழ்வு அதிகார சபையால் புதிய கட்டடம் ஒன்று அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

மருதனார்மடத்தில் 32 பரப்புக் காணியில் இயங்கும் இவ்வாழ்கத்தில் பல்வேறு வசதிக் குறைபாடுகள் இருந்தபோதும் அதன் மேற்பார்வையாளரும் ஆசிரியருமான அன்னலட்சுமி சின்னத்தம்பியின் மேற்பார்வையில் 4 தொண்டர் ஆசிரியர்களையும் கொண்டு இவ்வாழ்வகம் சிறப்புற இயங்கிவருகிறது.

இவ்வாழ்கத்தில் தங்கிப் பராமரிக்கப்படும் 30 பேரில் 23 பேர் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியிலும், தெல்லிப்பழை யூனியன் கல்லூரியிலும் கல்வி பயில்கின்றனர். 3 பேர் பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதிபெற்று பல்கலைக்கழகப் படிப்பை தொடரவுள்ளனர். ஏனையோர் வாழ்வகத்தில் தங்கியிருந்து சிறு சுயதொழில் முயற்சிகளில் ஈடுபடுகின்றனர். இங்கிருந்து கல்விகற்ற அல்போன்ஸ் ஸ்ரெனிஸ் அற்புதராஜா என்பவர் கடந்த 2002 A/L பரீட்சையில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியிலிருந்து தோற்றி பாடசாலையிலேயே சிறந்த பெறுபேறாகிய 2ஏ, பி பெற்றமை குறிப்பிடத்தக்கது.

விழிப்புலன் வலுவிழந்தோரை சமுதாயத்தில் புறக்கணித்து வைக்காமல் அவர்களுக்கு கைகொடுத்து உதவும் இவ்வாழ்வகத்தில் உலகளாவிய ரீதியில் கொண்டாடப்படும் வெள்ளைப் பிரம்பு தினம் இன்று முதல் கொண்டாடப்பட உள்ளது. இறுதி நாளான 20 ஆம் திகதி மருதனார்மடம் இராம நாதன் கல்லூரியில் வெள்ளைப் பிரம்பு தினவிழா நடைபெறவுள்ளது.

இக்காலப்பகுதியில் விழிப்புலன் வலுவிழந்தோருக்கான ஆதரவு திரட்டுதல், பிரசுரங்கள் வெளியிடுதல், போன்ற பல்வேறு செயற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன. (105)

# தகுந்த உடல் ஆரோக்கியம் இல்லாத சாரதிகளால் அதிகரிக்கும் விபத்துகள்!

(கொழும்பு)

நாட்டில் வீதி விபத்துக்கள் சமீப காலத்தில் ஆறு மடங்கால் உயர்ந்திருப்பதாக புள்ளிவிபரங்களில் இருந்து தெரியவருகின்றது.

வீதி விபத்துக்கள் அதிகரித்துள்ளமைக்கு சாரதிகளுக்கான அனுமதிப்பத்திர வழங்கலில் மருத்துவப்பரிசோதனைகளில் உரிய தேவைகளை நிறைவேற்றாமையே காரணம் எனக் கண்டறியப்பட்டிருக்கின்றது.

தேசிய போக்குவரத்து மருத்துவசங்கம் வீதி விபத்துகள் தொடர்பாக எடுத்துள்ள மதிப்பீடுகளில் இருந்து விபத்துகளுக்குக் காரணம் - சரியான மருத்துவச் சான்றிதழ்கள் வழங்கப்படாமலேயே இருந்துள்ளதாக அறியப்பட்டிருக்கிறது.

கடந்த இரண்டு மாதங்களில் நாடு முழுவதிலும் விபத்துக்களுடன் சம்பந்தப்பட்ட 45 சாரதிகள் கண்பார்வைக் குறைபாடு உடையவாகளாக இருந்துள்ளனர். மேலும் 500 பேர் மதுபோதையில் வாகனம் செலுத்தி விபத்துக்களை ஏற்படுத்தியிருந்தனர்.

இதைவிட மேலும் பெருந்தொகையானோர் உடல் உபாதைகளுடன் வாகனம் செலுத்தி விபத்துக்களுக்கு காரணமாக இருந்துள்ளனர். இதனால் வாகனச்சாரதிகளுக்கான அனுமதிப்பத்திரம் வழங்கும் போது உரிய மருத்துவச்சான்றிதழ்களை பெற்றுள்ளார்களா என்பதை உறுதி செய்ய வேண்டியிருக்கிறது என தேசிய போக்குவரத்து மருத்துவ சங்கம் கூறியுள்ளது.

# சாவகச்சேரியில் மிதிவெடிகள் அகற்றுவதில் இராணுவத்தினர்!

(சாவகச்சேரி)

சாவகச்சேரி கெருடாவில் பகுதியில் இராணுவத்தினரால் மிதிவெடிகள் அகற்றும் பணி தற்போது நடைபெற்று வருகின்றது. பருத்தித்துறை வீதியில் கனகம்புளியடிக்கும் பெருங்குளம் சந்திக்கும் இடைப்பட்ட பிரதேசத்திலேயே இப்பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இராணுவக் கப்டன் கமகே தலைமையிலான மிதிவெடி அகற்றும் இராணுவப் பிரிவினால் மேற் கொள்ளப்படும் இப்பணியில் இதுவரை 50 இற்கும் மேற்பட்ட வெடி பொருட்கள் கண்டெடுக்கப்பட்டு அவ்விடங்களிலேயே செயலிழக்க வைக்கப்பட்டுள்ளன. இப்பகுதிகளில் பெருமளவு மிதிவெடி எச்சரிக்கைப் பலகைகள் நாட்டப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (29)

# தமது வீடுகளைத் துப்புரவு செய்யும் கட்டுவன், குரும்பசிட்டிப் பகுதி மக்கள்!

(ஊரெழு)

குரும்பசிட்டி, கட்டுவன் பகுதியில் மீளக்குடியமர படையினர் அனுமதித்ததை அடுத்து - அப்பகுதி மக்கள் தமது இருப்பிடங்களில் துப்பரவுப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

நீண்டகாலமாக இடம்பெயர்ந்து பல்வேறு இடங்களில் பல இன்னல்களுடன் வாழ்ந்த மக்கள் - தற்போது சொந்த இடங்களில் மீளக் குடியமர அனுமதி கிடைத்ததை அடுத்து; ஆர்வத்துடன் தமது இருப்பிடங்களை திருத்தி அமைத்து வருகின்றனர்.

அதேவேளை - இப்பிரதேசத்தின் ஒருபகுதி இராணுவ உயர் பாதுகாப்பு வலயமாக அமைந்துள்ளமையால், அதனை அண்டிய பகுதியில் மக்கள் மீளக்குடியமர இதுவரை அனுமதிக்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (96)

# யாழ்.மாவட்ட பாடசாலைகளில் 'தகவல் தொழில்நுட்ப' பாடம்!

(ஊரெழு)

யாழ். மாவட்ட உயர்தரம் உள்ள பாடசாலைகளில் உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு "தகவல் தொழில் நுட்பம்" பாடத்தைக்கற்பிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதற்காக IAB மற்றும் IC பாடசாலைகளுக்கு கணினிகள் வழங்கும நடவடிக்கைகளும் கட்டம் கட்டமாக இடம்பெற்று வருகின்றன.

மேற்படி பாடத்தை கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு கருத்தரங்கும் நடைபெற்றுள்ளது.

அந்த வகையில் தகவல் தொழில்நுட்பம் என்ற பாடம் தற்போது யாழ். மாவட்ட பாடசாலை உயர்தர மாணவர்களுக்கு கற்பிக்கப்பட்டு வரப்படுகின்றது. (96)

# முஸ்லிம்களுக்கான தனியலகு; ஜே.வி.பி. கடும் எதிர்ப்பு!

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் தாயகக் கோட்பாட்டை எவ்வாறு ஜே.வி.பி ஏற்பதில்லை என்ற உறுதியுடன் இருக்கிறதோ அதேபோலவே கிழக்கு மாகாணத்தில் முஸ்லிகளுக்கு தனியலகு வழங்குவதையும் ஜே.வி.பி எதிர்க்கிறது என்று ஜே.வி.பி இன் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

இவ்வாறான தனியலகுகள் பற்றிச் சிந்தித்தால் மலைய மக்களும் தனியலகு கோருவார்கள் இவையெல்லாம் இலங்கையின் ஒற்றுமையைப் பாதிக்கும் என்றும அவர் தெரிவித்தார்.

இனப்பிரச்சினைக்கான எந்தவொரு தீர்வுத்திட்டமும் ஐக்கிய இலங்கைக்குள்ளேயே காணப்பட வேண்டும் என்றும் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

## மட்டக்களப்பு வீதி அபிவிருத்தி சபை கொழும்புக்கு!

மட்டக்களப்பு மாவட்டத்தில் செயற்பட்டுவரும் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அலுவலகத்தை கொழும்புக்கு மாற்ற அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரியவருகின்றது.

இந்த முயற்சியை உடனடியாகத் தடுத்து நிறுத்துமாறு அமைச்சர்கள் ஜோன் அமரதுங்க, அலிக் அலிவிகார ஆகியோருக்கு தாம் அவசரக் கடிதங்களை அனுப்பப் போவதாக மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கிருஷ்ண பிள்ளை தெரிவித்துள்ளார்.

# ஜி.ரி.சற். இன் யாழ். பணிகள் தொழில்சார் ரீதியில் மீளாய்வு!

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் ஜேர்மன் தொழில்நுட்பக் கூட்டுத்தாபனத்தின் (ஜி.ரி.சற்.) மூலமாக இதுவரை மேற்கொள்ளப்பட்ட வேலைத்திட்டங்கள் தொடர்பாக தொழில்சார் ரீதியான மீளாய்வு ஒன்று செய்யப்படவுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் ஜேர்மன் தொழில் நுட்பக்கூட்டுத் தாபனத்தின் ஊடாக கடந்த ஐந்து ஆண்டுகளில் பல்வேறுவகையான வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. வீடமைத்தல் ,பாடசாலை புனரமைத்தல், குடிநீர் வழங்கும் திட்டங்கள் மற்றும் பொதுக்கட்டடங்கள் அமைத்தல் என்று பல்வேறு செயற்திட்டங்கள் இது வரை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இனிவரும் காலங்களில் மேலும் பல செயற்திட்டங்களைச் செய்வதற்கு திட்டமிடப்பட்டிருக்கும் தற்போதைய நிலையில் இவ் மீளாய்வு வேலைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டிருந்த மேற்படி கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் நாயகம் இவ்விடயம் தொடர்பாக சம்பந்தப்பட்ட அனைத்து அதிகாரிகளுடனும் கலந்துரையாடினார்.

இவ்வாறான மீளாய்வின் இறுதியில் அறிக்கை ஒன்று தயாரிக்கப் படவுள்ளது. இவ் அறிக்கை மிக விரைவில் மேற்படி நிறுவனத்தின் தலைமை அலுவலகத்துக்கு சமர்ப்பிக்கப்படவுள்ளது. இந்த ஆய்வு அறிக்கையைத் தொடர்ந்தே மேற்படி நிறுவனத்துக்கூடான எதிர்கால செயற்திட்டங்கள் அமைய உள்ளதாக தெரியவருகிறது. (க)

# கார் குண்டுவெடிப்பு விவகாரத்தை விசாரிக்க
# இந்தோனேசியாவுக்கு அவுஸ்திரேலிய பொலீஸார்!

உலகவலம்

(மெல்பேண்)

இந்தோனேசியாவின் பாலித்தீவில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற பாரிய குண்டுவெடிப்பையிட்டு விசாரணை நடத்த அவுஸ்ரேலியா ஒரு விசாரணைக் குழுவை இந்தோனேசியாவிற்கு அனுப்பி வைத்தது.

இந்த விசாரணைக் குழுவில் அவுஸ்ரேலியப் பொலிஸ் நிபுணர்களும் அவுஸ்ரேலியப் புலனாய்வுச் சேவையினரும் இடம்பெறுகின்றனர்.

இந்தோனேசியாவிற்கு விசாரணைகளில் உதவும் இக்குழு, அவுஸ்ரேலியாவின் தேசிய பாதுகாப்புக்கு இச்சம்பவத்தால் அச்சுறுத்தல்கள் உள்ளதா எனவும் ஆராயும்.

இந்தோனேசியாவின் உள்நாட்டிலுள்ள இஸ்லாமியத் தீவிரவாதிகள் தனித்து செய்த பயங்கரமா அல்லது இதில் சர்வதேச இஸ்லாமிய தீவிரவாதத்தின் கையுமுள்ளதா என்பதை அறிவதிலும் அவுஸ்ரேலியா ஆர்வம் காட்டுகிறது.



காயப்பட்ட அவுஸ்திரேலியர்கள் சொந்த நாட்டுக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

அவுஸ்ரேலிய வெளிவிவகார அமைச்சின் பாராளுமன்றச் செயலாளர் கிறிஸ்ற்றின், குண்டுவெடிப்பில் அதிக எண்ணிக்கையான அவுஸ்ரேலிய உல்லாசப்பயணிகள் கொல்லப்பட்டிருப்பினும் இத்தாக்குதல் அவுஸ்திரேலியர்களை இலக்குவைத்து நடத்தப்பட்டது என்று சொல்ல முடியாது என்றார்.


எனினும் அவுஸ்ரேலியா ஏற்கனவே இந்தோனேசியாவுடன் பயங்கரவாதத்துடன் தொடர்புள்ள விடயங்களைக் கையாளுவதற்குரிய தெளிவான உடன்படிக்கை ஒன்றைச் செய்துள்ளமையையும் அவர் ஞாபகப்படுத்தினார்.

அத்துடன் இந்தோனேசிய அரசாங்கத்தின் மீது அமெரிக்கா அழுத்தம் கொடுக்கத் தொடங்கியுள்ளது. இஸ்லாமிய அடிப்படைவாத அமைப்புக்களின் தலைவரை உடன் கைது செய்யுமாறு அமெரிக்கா கேட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் பாலியிலிருந்து காயப்பட்ட தனது பிரஜைகளை அவுஸ்ரேலிய உலங்குவானூர்திகள் அப்புறப்படுத்தின. ஒரு உலங்குவானூர்தியில் ஏற்றப்பட்ட காயப்பட்டவர்கள் பதினைந்து பேரில் ஒருவர் நடுவழியிலேயே இறந்ததாகத் தெரியவந்தது.

மேலும் பாலியிலிருந்து மீளத் தமது நாட்டுக்குத்திரும்பிய பயணிகள்மீது கடுமையான விசாரணைக் கெடுபிடிகளை அவுஸ்ரேலிய சமஸ்டிப் பொலிஸார் மேற்கொண்ட வண்ணமிருந்தனர் என அங்குள்ள சர்வதேச செய்தியாளர்கள் தெரிவித்தனர்.

உல்லாச சுவர்க்கமாகத் திகழ்நத பாலித்தீவின் உல்லாச விடுதிகளும் மதுபானச்சாலைகளும் கடற்கரைகளும் வெறிச்சோடிச் சோகமயமாகவுள்ளதாகவும் செய்தியாளர்கள் கூறினர்.



ஈராக்கியப் போரை எதிர்கொள்ளும் அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சு மிக நவீன ரகப் போர் விமானங்களை உருவாக்குவதற்கு உத்தரவிட்டுள்ளது.

# சேர்பிய ஜனாதிபதித் தேர்தல் சட்டப்படியாக ரத்து!

(பெல்கிரேட்)


சேர்பியாவில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் 45%ஆன வாக்குகளே அளிக்கப்பட்டுள்ளன. இதன் காரணமாக இத்தேர்தல், சேர்பிய அரசியல் யாப்பிற்கிணங்க இரத்துச் செய்யப்பட வேண்டியதாக உள்ளது என்று சேர்பிய அரசாங்கம் அறிவித்துள்ளது.

சேர்பியாவின் யாப்பின்படி 50% மான வாக்குகள் ஜனாதிபதித் தேர்தலில் அளிக்கப்பட்டால் மாத்திரமே அத்தேர்தல் முடிவுகள் செல்லுபடியானதாகும்.

சேர்பியாவின் ஜனாதிபதித் தேர்தல் தினத்தில் கடும் மழை பொழிந்ததன் காரணமாகவே வாக்களிப்பு மந்தமாக இடம்பெற்றதாகத் தெரியவருகிறது.

மறு தேர்தல், அடுத்த மூன்று மாதங்களின் பின் நடைபெற வேண்டிய நிலையுள்ளது என அதிகாரிகள் தெரிவித்தனர்.

அதற்கிடையில் பாராறுமன்றத்தில் சட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டுமெனில் தேசியவாதிகளும் சீர்திருத்தவாதிகளும் ஒன்றிணைந்து ஆதரவு காட்ட வேண்டிய இக்கட்டான நிலையை பாராளுமன்றத் தேர்தல் முடிவுகள் தந்துள்ளன எனவும் தெரியவருகின்றது.



வாக்காளர்கள் இல்லாமல் வெறிச்சோடிக் கிடக்கும் சேர்பிய வாக்களிப்பு நிலையங்களில் ஒன்று.

அண்மையில் சேர்பியாவில் உள்ளூராட்சிச் சபைகள், பாராளுமன்றத்திற்கான அங்கத்தவர்களைத் தெரிவு செய்தல் ஆகிய தேர்தல்களும் ஜனாதிபதித் தேர்தலுடன் நடைபெற்றமையும் வாசகர்கள் அறிந்ததே.

# ரஷ்யா மறுதடவையும் செச்சினியாவைத் தாக்கும்!

(மொஸ்கோ)

ரஷ்யா, செச்சினியத் தீவிரவாதிகள் மீது மீண்டும் தாக்குதல்களை ஆரம்பிக்த் திட்டமிட்டுள்ளது. இவ்விடயம் தொடர்பாக ஐ.நா.பாதுகாப்புச்சபைக்கு கடிதம் மூலம் ரஷ்யா அறிவித்துள்ளது. ஐ.நா. அங்கீகாரமின்றியே ஒரு தலைப்பட்சமான தாக்குதலாக இது அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும் செச்சினியாவுக்கு, ஜோர்ஜியா ஆதரவு வழங்குகின்றது என்ற குற்றச்சாட்டையும் ரஷ்யா முன்வைத்துள்ளது. ஜோர்ஜியா மீதும் ரஷ்யா தாக்குதல் நடத்த எத்தனிக்கிறது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

எல்லை தாண்டிய பயங்கரவாதச் செயல்கள் இடம்பெறுவதைத் தவிர்க்க ரஷ்யாவும் ஜோர்ஜியாவும் தமது எல்லையில் கூட்டு ரோந்து நடவடிக்கைகளை மேற்கொள்ள முனபு முடிவு செய்திருந்தன. எனினும் இந்நடவடிக்கை தொடர்பாக ரஷ்யா திருப்தியற்றதாக இருக்கிறது.

# உக்ரெய்ன் ஈராக்குக்கு இராணுவ ராடர் சாதனங்களை வழங்கியதா?



ஈராக்கிய இராணுவத்துக்கு உக்ரெய்ன் இராணுவ ராடர் தொகுதியை விற்றது என்கிறது அமெரிக்கா!

ஐ.நாவின் தடை அமுலில் இருந்தபோது உக்ரெயின் ஈராக்குக்கு இராணுவ ராடர் சாதனத் தொகுதியொன்றை வழங்கியிருந்தது என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

இக் குற்றச்சாட்டை உக்ரெயின் மறுத்துள்ளது. ஆனால் இக்குற்றச்சாட்டுக்கான போதிய ஆதாரங்கள் தன்னிடமுள்ளதாக அமெரிக்கா தெரிவித்தது.

அதேவேளை பிரிட்டன், அமெரிக்கா ஆகிய நாடுகள் இணைந்து இவ்விடயம் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளன என அந்நாடுகளின் அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

10 நாட்கள் நீடிக்கவுள்ள இவ் விசாரணைகளுக்குத் தனது நாடு பூரண ஒத்துழைப்புக்களை வழங்குவதற்குத் தயங்கப் போவதில்லை என்று உக்ரெயின் அரசாங்கம் அறிவித்துள்ளது.

# ஐவரிக்கோஸ்ட் பெரும்பகுதி கிளர்ச்சிப் படையிடம்!

ஐவரிக் கோஸ்ட்டில் அரசாங்கத்துக்கு விசுவாசமான படைகளுக்கும் கிளர்ச்சிப் படைகளுக்கும் இடையில் கடும் சண்டைகள் இடம்பெற்றுவருகின்றன.

கிளர்ச்சிப்படைகள் துரிதமாக முன்னேறி நாட்டின் அரைப்பங்கு நிலத்தைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளன.

ஐவரிக் கோஸ்ட்டின் முக்கிய வருமானப் பயிரான கொக்கோ விளைவிக்கப்படும் நிலங்களும் கிளர்ச்சிப் படைகளின் கட்டுப்பாட்டில் வந்துள்ளன.

அதேவேளை செனகல் நாட்டின் வெளிவிவகார அமைச்சர் சமாதானத்தைக் கொண்டு வருவதற்கான மத்தியஸ்த முயற்சிகளில் இறங்கியுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது. அவர் கிளர்ச்சிப் படைத் தலைவருடன் தொலைபேசியில் உரையாடினார்.

மேற்கு ஆபிரிக்காவின் நாடுகளைச் சேர்ந்த வெளிவிவகார அமைச்சர்களின் மத்தியஸ்தத்தின் மூலம் முன்னர் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போர் நிறுத்தம் ஐவரிக் கோஸ்ட் அரசாங்கம் பின்வாங்கியதால் கைவிடப்பட்டது.

ஆயுதங்களை ஒப்படைத்தாலே பேச்சுவார்த்தை என அறிவித்த அரசு, கிளர்ச்சிப் படைகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்கள்மீது தாக்குதலை ஆரம்பித்திருந்தது.

# ஐ.ஆர்.ஏ. முரண்படுகின்றது; பிரிட்டிஷ் அமைச்சர் சாடல்!

(டப்ளின்)

ஐ.ஆர்.ஏ. ஆயுதங்களை கையளித்தல் விடயத்தில் உரிய இணக்கப்பாடுகளை நிறைவேற்றத் தவறியுள்ளது என வட அயர்லாந்துக்கான பிரிட்டிஷ் அமைச்சர் ஜோன்றீட் தெரிவித்தார்.

அத்துடன் வட அயர்லாந்தின் தலைமையகத்தில் உளவு வேலைகளில் ஈடுபட்டு தகவல்களை வெளிநாடுகளுக்கு விற்றதாகக் குற்றஞ்சாட்டப்பட்டு ஐ.ஆர்.ஏஇன் அரசியல் பிரிவான சின்பெயினைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.



நஸ்ரீன்.



ஷேக் [illegible]னா

## பங்களாதேஷ் பெண் எழுத்தாளரும் பங்களாதேஷ் பெண் அரசியல்வாதியும்


இஸ்லாம் மதம் பற்றி பங்களாதேஷ் எழுத்தாளர் நஸ்ரீன் எழுதியுள்ள கருத்துக்கள் முஸ்லிம் பழமைவாதிகளை ஆத்திரப்படுத்தியுள்ளது. பங்களாதேஷின் முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனா, நஸ்ரீனை இழிவானவர் என விமர்சித்துள்ளார்.





# இப்படியும் வேவு விமானம்

எதிரிகளின் நிலைகளைக் கண்டறிய ஆளில்லா விமானங்கள்(un manned aerial vehicle)- (எங்கட மொழியில் வண்டு) பயன்படுத்தப்படுவது எமக்குத் தெரியும். இதேவிமானம் இப்போது கையில் எடுத்துச்சென்று எதிரியின் நிலைகளுக்கு அருகே மேலாக எறிந்து அதை பறக்கவிட்டுத் தகவல்களை பெறுவது சுலபமானதாகக் கருதப்படுகிறது. தும்பிக்கண் என்று பெயரிடப்பட்ட இந்த ஆளில்லா சிறு கண்காணிப்பு விமானத்தின் நிறை மூன்று கிலோதான். இதை மடக்கிச் சிறிதாக்கி படைவீரரின் சிறிய பைக்குள் வைக்கமுடியும்.

சற்லைட்களின் வழிநடத்தல் மூலம் இயங்கும் இந்த விமானம் எதிரிகளின் நிலைகளைப் படம் பிடித்து அனுப்பக் கூடியது. இதனை இவ்வருட இறுதியில் பாவனைக்கு கொண்டு வர அமெரிக்க கடற் படை திட்ட மிட்டுள்ளது.










பல்சுவை அரங்கு

# அழகிய ஜப்பானிய வீதிகள்







ஜப்பானியர்கள் அழகுணர்ச்சி உடையவர்கள் என்பதையும், பழமை பேணுபவர்கள் என்பதையும் இந்தப் படங்களில் காணக்கூடியதாக உள்ளதல்லவா? ஜப்பானின் கியூசு நகரின் சில வீதிகளில் எடுக்கப்பட்ட படங்கள் இவை. மரஞ் செடிகளைக்கூட மதில் சுவர்போல் வெட்டி வைத்திருக்கிறார்கள் இந்த ஜப்பானியர்கள்.

# அட இதிலும் இயந்திரமா?



வீடுகளில் வளர்க்க வர்ண மீன்களை அதிக பணம் கொடுத்து வாங்கி மறுநாள் அது இறந்து விட கவலைப்படும் நிலை இனியும் இல்லை. இதற்கு ஜப்பானியர்கள் தீர்வைக் கண்டுள்ளனர்.

இதற்காக ரோபோ மீன்களை கண்கவர் வர்ணங்களில் அவர்கள் உற்பத்தி செய்கின்றனர். **EAMEX** கோப்பிரேஷனின் தயாரிப்பான இம் மீன்களில் செயற்கைத் தசைகளும் பொருத்தப்பட்டுள்ளன. ஐந்து சென்ரிமீற்றர் அளவில் இம் மீன்கள் தயாராகின்றன. செக்கனுக்கு ஒரு தடவை இந்த ரோபோ மீன் வாலை அசைத்து நீரில் நீந்தும். பார்ப்பவருக்கு உண்மையான மீன் போலவே தெரியும்.

அட இதிலும் இயந்திரமா? என அதிசயிக்கிறீர்களா?





# சிரிக்கவும் சிந்திக்கவும் வைத்த சார்லி சாப்ளின்

பகுதி -3

ஒருநாள், மழையினால் காலியாயிருந்த பேருந்தின் மேல்மாடத்தில் சார்ளியின் தமையன் சிட்னிக்கு ஒரு பணப்பை கிடைத்தது. அதில் சொந்தக்காரரின் பெயரோ முகவரியோ இருக்க வில்லை. நிறைய சில்லறை நாண யங்கள் இருந்தன. அதை அவன் வீட்டுக்கு எடுத்துச் சென்றதும் அதன் உள்ளறையில் ஏழு தங்கசவரன்கள் இருப்பதை ஹன்னா கண்டு பிடித்தாள்.

ஒரு மகத்தான நாளில் வெளியே சென்று அதை செலவு செய்ய முடிவு செய்தாள் ஹன்னா.

அவள் தன் சிறுவர்களை நீராவி ரயிலில் கடற்பகுதிக்கு அழைத்துச் சென்று தின்பண்டங்கள், கிரீம், பணிஸ்கள், எலுமிச்சம் பழச்சாறு இவையெல்லாம் வாங்கிக் கொடுத்த தோடு அவர்களை விளையாட்டுக்களிலும் பங்குபெறச் செய்தாள். வழக்கமாக அவர்கள் அணியும் உடைகளின் சுவடுகளே தெரியாவண்ணம் அவர்களுக்கு புத்தம் புதிய ஆடைகள் அணிவித்திருந்தாள். இது போன்ற மகத்தான நாட்கள் எப்போதாவது தான் வந்தது. ஆனால் பணநெருக்கடியான நேரங்களில் இவையெவுதுமில்லாமலேயே எப்படி சந்தோஷமாக இருப்பதென்பதை ஹன்னா அவர்களுக்குக் கற்றுக் கொடுத்தாள்.



ஜன்னலருகே அமர்ந்து அவ்வழிச் செல்பவர்களைக் கவனித்து, அவர்களுடைய தோற்றத்தையும் செய்கை களையும் வைத்தே அவர்களின் குணாதிசயங் களை ஊகித்தாள். சிட்னியையும், சார்லியையும் மகிழ்விப்பதற்காக அவர்களை மையமாக வைத்தே கதைகள் உருவாக்கினாள்.


சில சமயங்களில் தான் தெருவில் கண்டதை யெல்லாம் ஒரு வார்த்தை கூட வாய் மொழியாகக் கூறாமல் கைகளினாலும் முகபாவங் களினாலும் செய்கையின் மூலமாக அவர்களுக்கு விவரித்தாள்.

லண்டன் நகரத்துக் காட்சிகளையும் ஆரவாரங்களையும் கிரகித்துக் கொண்டது போலவே சார்லி தன் தாயின் திறமைகளையும் கிரகித்துக் கொண்டு அதைத் தன் வாழ்நாள் முழுவதும் உபயோகித்தான். பிற்காலத்தில் அவன் பெரிய கோடீஸ் வரனாகவும், உலகப்புகழ் பெற்ற நடிகனாகவும் உருவெடுத்த போது அவனுடைய தாயரின் திறமைகளும் சம்பவங்கள் நிறைந்த அவனுடைய இளமைக் காலமும் தான் அவனுடைய தொழிலுக்குச் சரியான பயிற்சியாக அமைந்ததாகக் கூறினான்.

ஹன்னாவும் அவள் மகன்களும் ஒரு விசித்திரக் குடும்பமாகத் தென்பட்டார்கள். அவர்களைச் சுற்றி அவர்களே ஒரு பாதுகாப்புச் சுவர் எழுப்பிக்கொண்டது போலத் தோன்றியது ஆனால் அது கொஞ்சம் கொஞ்சமாக இடிந்து கொண்டிருந்தது. ஹன்னா அடிக்கடி கடுமையான தலைவலியால் அவதிப்படத் தொடங்கினாள். அது மிகத்தீவிரமாக அவள் சிகிச்சைக்கு ஒரு மாதம் மருந்து வமனையில் கட்டாயமாக இருக்க நேர்ந்தது.

(அடுத்த அரங்கில் தொடரும்)

# மின்சாரம் உற்பத்தி செய்யும் உயர்ந்த மாடிக் கட்டடிடங்கள்



மேற்குலக நாடுகளில் வான் நோக்கி உயரும் கட்டிடங்களுக்கு மின் விநியோகம் மற்றும் சக்தி வழங்கலுக்குப் பெரும் நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன. இதனை தவிர்க்க பிரிட்டன், ஜேர்மனி, நெதர்லாந்து ஆகிய நாடுகள் ஒருங்கிணைந்து ஒரு புதிய வடிவிலான மாடி அலுவலகம் ஒன்றை அமைக்க திட்டமிட்டுள்ளன. அதன் தோற்றத்தையே இங்கு காண்கிறீர்கள்.

இந்த இரட்டை மாடிகளுக்கிடையில் பாரிய காற்றாடிகளை பொருத்துவதன் மூலம் மின் தேவையின் 20 வீதத்தை பூர்த்தி செய்யமுடியும் என எதிர்பார்க்கப்படுகிறது. 'என்ன இக் கட்டிடத்திற்கு கீழாக செல்வோருக்கு காற்றின் வேகம் அதிகமாக இருப்பதாக தெரியும் அவ்வளவுதான்!

## எழில் கொஞ்சும் திருகோணமலைத் துறைமுகம்!





உலகின் 5 முக்கிய இயற்கைத் துறைமுகங்களில் ஒன்றாக நமது திருகோணமலை துறைமுகம் உள்ளது. வங்களாவிரிகுடாவில் கேந்திர நிலையில் இத்துறைமுகம் உள்ளது என்பதால் உலகளவில் இது கேந்திர முக்கியமானதாக உள்ளது. 25 சதுர கிலோமீற்றர் பரப்புக் கொண்ட இத் துறைமுகம் மலைகளால் பாதுகாக்கப்பட்ட ஒன்று என்பது முக்கியமானதாகின்றது.

வரலாற்றுக் காலத்தில் தமிழர்களின் முக்கிய துறைமுகங்களில் ஒன்றாக விளங்கிய திருகோணமலை துறைமுகம் 1624இல் போர்த்துக்கீசராலும் 1782இல் போத்துக்கேயரிடமிருந்து ஒல்லாந்த ராலும் அவர்களிடமிருந்து பிரெஞ்சு கடற்படையினராலும் அவர்களி டமிருந்து பிரிட்டனினராலும் கைப்பற்றப்பட்டது. 1957இல் அது பிரிட்டனிட்மிருந்து சிறீலங்கா அரசிடம் கைமாறியது. 2ஆம் உலகப் போரில் பிரிட்டிஷின் பிரதான கடற்படைத் தளங்களில் ஒன்றாக இருந்த திருகோணமலை துறைமுகத்தின் சீனன் குடாவில் 100 பாரிய பெற்றோலியத் தாங்கிகள் அமைக்கப்பட்டன. 1942 ஏப்ரல் 8 இல் ஜப்பான்- திருகோணமலை துறைமுகத்திலிருந்த பிரிட்டிஷ் கடற்படை தளத்தை தாக்கியது. இதில் எரிபொருள் தாங்கி ஒன்று அழிந்தது. 2 பிரிட்டிஷ் கப்பல்கள் அழிந்தன. அவற்றில் ஒன்று விமானம் தாங்கிக் கப்பலாகும்.

இன்று திருகோணமலை துறைமுகத்தில் பிறீமா கோதுமை ஆலை, மிற்சுயி சீமெந்து ஆலை, சிறீலங்கா கடற்படை முதன்மைத் தளம் என்பவை உள்ளன.

தாயகத்தில் வாழும் ஒவ்வொருவரும் ஒரு தடவை திரு கோணமலை துறைமுகத்தின் வனப்பையும் மதிப்பையும் நேரடியாக பார்க்க வேண்டும்.

அறிதிரு

## பொய் பற்றிய உண்மை

பொய் பற்றிய உண்மையொன்று உண்டென்றால் அது இது தான். பெரும்பான்மையானோர் தமது அன்றாட வாழ்க்கையில் பொய்யைத் தயங்காமல் பேசுகின்றனர்.

அமெரிக்காவின் மசாசுசெட்ஸ் பல்கலைக்கழகத்தின் உளவியல் பேராசிரியரான றொபேர்ட் பெல்ட்மான் இப்படிக் கூறுகிறார்.


மனித வாழ்க்கையில் பொய்யின் செல்வாக்குப் பற்றி அறிந்து கொள்வதற்காக இவர் பலரை தம்மிடையே உரையாட விட்டு வீடியோ மூலம் பதிவு செய்தார்.

இவ் வீடியோப்பிரதிகளை பின்னர் அவதானித்த போது, பத்து நிமிட இடைவெளியில் 60வீதமானோர் குறைந்தது ஒரு தடவையாவது பொய்கூறுவதைக் கண்டு பிடித்தனர். இதில் பெரும் பான்மையினோர் இரண்டு அல்லது மூன்று தடவைகள் பொய்கள் கூறியுள்ளனர்.

இதில் ஆச்சரியத்தக்க விடயம் என்னவென்றால், தமது பொய்யாற்றல் குறித்து தாமே ஆச்சரியப் பட்டுவிட்டனர் .

பேராசிரியர் பெல்ட்மான் 'கண்டுபிடித்த' இன்னுமொரு விடயம் என்னவெனில், பெண்களை விட ஆண்கள் அதிகளவில் பொய் கூறிவிடவில்லை. வித்தியாசம் என்னவென்றால் தாம் உரையா டிக் கொண்டிருப்பவரை உற்சாகப்படுத்த அல்லது அவர்களை உயர்த்திக் காட்ட பெண்கள் பொய்கூறினர். ஆண்கள் தம்மைத் தாமே உயர்த்திக் காட்டப் பொய்கூறினார்என்பது தான்.

## முப்பரிமாண நுண்ணுயிர்க் காட்டி



புதிதாக அறிமுகமாகியுள்ள நுண்ணுயிர்க் காட்டியின் விம் பங்கள் முப்பரிமாணத்தில் தெரியக்கூடியது. லேசர்கதிரினால் ஒளியூட்டப்படும் இந்த கருவியில் இலத்திரனியல் கமராவும் பொருத்தப்பட்டிருக்கும். இந்த கமராவில் பதியும் விம்பம் கணினியினுள் செலுத்தப்பட்டு விம்பம் படமாக்கப்படும்போது அது முப்பரிமாண தோற்றத்தில் தோன்றும்.


படத்தில் தெரிவது எலி வாலின் குறுக்குவெட்டு முகத் தின் முப்பரிமாணபடமாகும்.


## உலகில் பெறுமதியில் உயர்ந்தவை

☞ உலகில் அமைந்துள்ள உயர் விடுதிகளில் துபாய் நாட்டில் அமைந்துள்ள **Burj Al Arad** என்ற விடுதியே அதி கூடிய பணம் வசூலிக்கும் விடுதியாக அமைந்துள்ளது.அங்கு ஒரு இரவிற்கு தங்க 770 டொலர் முதல் 7700 டொலர் வரை உயர்வான கட்டணத்தில் அழகிய அறைகள் வாடகைக்கு உள்ளன. வாழ்க்கை முழுவதும் செலவு செய்தாலும் இந்தப்பணம் ஒருவருக்கு முடியாது அல்லவா?

☞ அதிக விலையுள்ள காரின் பெயர் 250**GTO Ferrari** இதனது விலை 10 மில்லியன் டொலராகும்.

☞ இவற்றையெல்லாம் விட உலகில் உயர்ந்த உருளைக்கி ழங்கின் விலை தெரியுமா? 500 டொலர் ஒரு கிலோ. இந்த உருளைக் கிழங்கின் பெயர் **Labonntte** இது பிரான்ஸ் நாட்டில் உற்பத்தி செய்யப்படுகிறது.





## நல்லதொரு குடும்பம் ஒரு பல்கலைக்கழகம்



(சென்றவாரத் தொடர்ச்சி)

குடும்பத்தில் பெற்றோர் பிள்ளைகள் உறவில் இரு விதமுண்டு. ஒன்று பெற்றோருக்கு இயற்கையாகப் பிறக்கும் பிள்ளைகள். மற்றையது வேறொரு பெற்றோரிடம் எடுத்து வளர்க்கும் பிள்ளைகள். நம்மவரிடையே ஒரு தப்பான அபிப்பிராயம் உண்டு. எமக்கு இயற்கையாகக் கிடைக்கும் பிள்ளையே உண்மையான பிள்ளை. மற்றது வளர்ப்புப் பிள்ளை. அது பிள்ளையில்லை என்ற கருத்துண்டு. பெற்றோர்கள் இவ்விரு பிள்ளைகளையும் ஒரே மாதிரியே நடத்த வேண்டும். வளர்த்த பிள்ளை எமது பிள்ளையல்ல என்ற எண்ணம் பெற்றோரிலும், உறவினரிலும் இருந்தால் இது பிள்ளையின் மனதுக்குள் பெரும் பாதிப்பை உண்டு பண்ணும். அப்பிள்ளையின் எதிர்காலம் பாதிப்படையும். வளர்ந்தபின் தான் வளர்ப்புப் பிள்ளை என்று அறிந்ததும், இன்று பல பிள்ளைகள் மனமுறிவுக்கு ஆளாகியுள்ளனர். வேதனையான வாழ்க்கை வாழ்கின்றனர். இந்த நிலை உருவாகாத விதத்தில் பெற்றோரும், மற்றவரும் இரு வகையான பிள்ளைகளும் எந்த விதமான வேறுபாடும் இல்லாத பிள்ளைகளே என்ற மனநிலையை உருவாக்க வேண்டும். அதன்படி செயற்படவும் வேண்டும்.

ஆதி காலத்தில் கணவன் மனைவிக்கிடையில் தமது தொழிலிலும் உறவு ஏற்படச் சந்தர்ப்பம் இருந்தது. விவசாயம் செய்யும்போது, மீன் பிடிக்கும்போது ஆணுக்குப் பெண் உதவி செய்வாள். ஆனால் இன்று வெளிநாட்டில் தொழிலுக்காகச் செல்வதாலும், பெண் வேறு தொழிலுக்குச் செல்வதாலும் இருவரும் சேர்ந்து நடமாடச் சந்தர்ப்பம் குறைந்துள்ளது. அதனால் இருவருக்குமிடையில் நல்ல அன்புறவு வளரச் சந்தர்ப்பம் குறைந்து கொண்டே போகிறது இதனால் பல விளைவுகள் குடும்பத்தில் ஏற்படுகின்றன. மனைவி, கணவன் வேறு அன்புத் தொடர்பை ஏற்படுத்த வழி வகுக்கிறது. அதனால் பிள்ளைகளின் வாழ்வு சிதைந்து போகிறது.

அதே போன்று குடும்பத்தில் கணவன், மனைவி இருவரும் கதைப்பது முக்கியம். கருத்து பரிமாறுவது முக்கியம். இது இல்லாமல் பிள்ளைகள் நல்ல மனிதராக முடியாது. நல்ல தொடர்பை பெற்றோரிடம் இருந்தே பிள்ளைகள் பழகுகின்றனர். பிறப்பால் ஒரு பிள்ளை நல்ல மனிதனாக முடியாது. குடும்பத்தில் மனித சூழலில் அப்பிள்ளை அதைப் பழக வேண்டும் என முன்பு பார்த்தோம். நல்ல நடமாட்டம், நல்ல பழக்கவழக்கம் உள்ள குடும்பத்தில் வளரும் பிள்ளை நல்ல பழக்கவழக்கம், நல்ல நடமாட்டமுள்ள பிள்ளையாக வளரும்.

ஒரு பிள்ளை சிறு வயதிலேயே காட்டில் மிருகங்கள் மத்தியில் மட்டும் வளர்ந்து வந்தால் அப்பிள்ளை மிருகங்களைப் போலவே உணவு உண்ணும். மிருகங்களைப் போலவே நடமாடும். சத்தம் போடும். ஆகவே நல்ல மனிதனாகப் பிள்ளை வளர வேண்டுமானால் நல்ல அன்புத் தொடர்புள்ள குடும்பத்தில் வளர வேண்டும்.

பிள்ளையின் ஆளுமை உருவாகும் ஆரம்பப் பாடசாலை குடும்பமாகும். பிள்ளை பெறுமதிகளை, எண்ணங்களை குடும்பத்திலிருந்து உறிஞ்சி எடுக்கிறது. அது உறிஞ்சி எடுக்கும் போது இது சரி, இது பிழை எனப் பிரித்து உறிஞ்சி எடுப்பதில்லை. புகைப்படப்பெட்டி போன்று உள்ளதை அப்படியே உறிஞ்சி எடுக்கிறது.

வீட்டில் சமுதாயத்தில் பேசப்படும் வார்த்தைகள், எமது நம்பிக்கைகள், மூடக் கொள்கைகள், நல்ல கொள்கைகள், பழக்கவழக்கங்கள், மொழியைப் பற்றி, இனத்தைப் பற்றி, மற்றவர்களைப் பற்றியுள்ள எண்ணங்களை அப்படியே உறிஞ்சி எடுக்கிறது. அதன்படி தானும் வாழப்பழகுகிறது. ஆகவே பெற்றோர், பெரியோர் இதனை மனதில் கொண்டு நாம் எம்மை மாற்றி வாழப் பழக வேண்டும்.

எண்ணம் என்று மேலே கூறியது என்ன வென்றால் நாம் ஒரு விடயத்தை, நிகழ்ச்சியைக் கண்டு அதனை விளங்கிக் கொள்ளப் பழக்கப்பட்டுள்ளோம். ஒவ்வொரு குடும்பமும் ஒரே மாதிரி நிகழ்ச்சிகளைப் பார்ப்பதில்லை. சிலர் வேறுபடலாம். சிலர் ஒன்றாகலாம். உதாரணமாக பணம், உணவு, உடை, கொண்டாட்டம், விருந்துபசாரம் போன்றவற்றில் வேறுபட்ட எண்ணங்களுடன் செயற்படலாம். நல்லது கெட்டது என்பதில் வேறுபட்ட எண்ணங்களைக் கொண்டிருக்கலாம். தமிழர்கள் என்ற ரீதியில் குடும்பத்துக்குக் குடும்பம் இது வேறுபடலாம் .

மேலும் தமிழர்கள் மத்தியில் மத அடிப்படையில் கிறிஸ்தவக் குடும்பங்களை நோக்கினால் குலம், இனம், மொழி பற்றி நோக்கும் போது பொதுவாக ஒவ்வொரு மனிதனும் சமத்துவம் உடையவர்கள் என்பர். ஆனால் இது குடும்பத்துக்குக் குடும்பம் நடைமுறையில் அப்படியில்லாது செயலில் வேறுபட்டுச் செயல்படக் கூடும். சிலர் மீது கூடுதலான விருப்பம் கொள்வர். எல்லோரையும் சமமாக எண்ணுவதில்லை. இப்படிப்பட்ட எண்ணங்கள், பழக்கவழக்கங்களைப் பிள்ளைகள் குடும்பத்திலிருந்து உறிஞ்சி எடுக்கின்றனர். இதில் எது சரி, எது பிழை என்று வேறுபடுத்தி சரியானதை மட்டும் எடுப்பதில்லை. சிறுவயதில் பிள்ளைகளுக்கு அவ்வளவு திறமை இருப்பதில்லை. ஆகவே ஒரு பிள்ளை குடும்பத்திலேயே நல்லதையும் கெட்டதையும் முதலில் பழகுகிறது. குடும்பத்திலே அப்பா, அம்மா, பெரியவர்கள் பிள்ளைகளுக்கு மிகவும் முன் மாதிரியாக வாழ வேண்டும். பிள்ளை நல்ல உறவை வளர்த்துக் கொள்ள நல்ல குடும்பம் தேவை.

எஸ்.ஜே.யோகராசா

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225108 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*எடுத்துவைக்கும் முதலடி சிறப்பானதாக இருந்தால் முடிவும் சிறப்பானதாக இருக்கும்.*
- மெக் செலான்.

# நமது நோக்கு

## அருகிலிருக்கும் ஆபத்து

யாழ்.குடாநாட்டில், ஆண்டுகள் கணக்கில் தம் சொந்த இடங்களை விட்டு இடம்பெயர்ந்திருந்த மக்கள் மீளவும் சில இடங்களுக்குத் திரும்பத் தொடங்கியிருக்கின்றனர். அதேவேளை- இராணுவத்தினர் முகாம்கள், காவலரண்கள், மண்ணனைகள் அமைத்திருந்த பகுதிகள் சிலவற்றிலிருந்தும் படையினர் சற்றே விலகியிருப்பதால்-அப்பகுதிகளில் மக்கள் நடமாடவும் செய்கின்றனர்.

இவ்வாறான சூழலில்- முன்னறிவித்தல்கள் கொடுக்கப்பட்டிருந்தும், கண்முன்னேயே பல சம்பவங்களைக் கண்டிருந்தும், கேட்டிருந்தும் - மிதிவெடிகள் மற்றும் பொறிவெடிகளுக்குள் சிக்கும் பொதுமக்களின் எண்ணிக்கை கடந்த சில நாட்களாக அதிகரித்துக் காணப்படுகின்றது.

யாழ்.வைத்தியசாலையில் மட்டும் கடந்த வாரத்தில் மிதிவெடிகளினால் உயிரிழந்த, படுகாயமடைந்த, அங்கங்களை இழந்தவர்களின் எண்ணிக்கை இதைப் புலப்படுத்துகின்றது.

யாழ்.குடாநாட்டில் கடந்த காலங்களில் படையினரால் சரமாரியாகப் புதைக்கப்பட்ட மிதிவெடிகளைப் பற்றிய புவியியல் ரீதியாக இனங்காணக்கூடிய வரைபடங்கள் இல்லாத/ இன்னமும் கையளிக்கப்படாத நிலையில் - அபாயம் நிறைந்த பிரதேசங்கள் ஏராளமாக இருக்கின்றன.

பார்வைக்கு வெறுமனே- பற்றைகளும் கற்றரையுமாகத் தெரியும் நிலங்களில் இவ்வாறான தொரு அபாயம் காத்திருப்பதை அறிந்தும் -தமது நிலங்களைப் பார்வையிட வேண்டும் என்ற அவாவும், இந்த அவா வெளிப்படுத்தும் அலட்சியத் துணிச்சலும் மக்களைப் பெரிதும் பழிவாங்குபவையாக உள்ளன.

தமது சொந்த நிலங்களைப் பார்வையிடவும், சுத்தப்படுத்தி அதில் மீளக்குடியமரவும் எவருக்கும் உள்ள ஆதங்கம் மிக நியாயமானதே. ஆனால்- அதற்காக அவசரப்பட்டு வீணான இழப்புக்களைச் சந்திப்பதென்பது நியாயப்படுத்த முடியாததாகும்.

அதேவேளை - மிதிவெடிகளை, பொறிவெடிகளைப் பற்றி அறிந்திருந்தும் வீடுகளிலும், வீதிகளிலும் கிடக்கும் மர்மப்பொருட்களை- தன்னார்வம் மிகக்கொண்டு கையாளுவது, ஆபத்தை வீணே விலைக்கு வாங்கிக்கொள்வதாக முடிகின்றது.

இவ்வாறான நிலையில் பொதுமக்களுக்கான- கண்ணிவெடிகள், மிதிவெடிகள், பொறிவெடிகள் பற்றிய தகவலறிவு போதுமானதாகப் போய்ச் சேரவில்லையோ என்ற சந்தேகமும் எழுகின்றது.

கண்ணிவெடிகள், மிதிவெடிகள் அகற்றுவதில் அக்கறையுள்ள மனிதநேய அமைப்புக்கள் இன்னமும் தீவிரமான அளவில், மக்களிடையே இந்த அபாயம் பற்றிய பிரச்சாரத்தை மேற்கொள்ள வேண்டிய தேவையை - நடந்து வரும் சம்பவங்கள் உணர்த்துகின்றன.

அதேவேளை - சமாதானத்தின் விளைவுகளை அனுபவிக்க விரும்பும், தத்தமது சொந்த நிலங்களில் மீளக்குடியமர்ந்து தமது சுமுக வாழ்க்கையை ஆரம்பிக்கக் காத்திருக்கும் மக்களின் உணர்வலைகளைப் புரிந்துகொண்டு - சர்வதேசமும், மனிதநேய அமைப்புக்களும் - கண்ணிவெடி அகற்றும் தமது பணிகளுக்கான - ஆளணியையும் தகுந்த நவீன உபகரணங்களையும் இன்னும் அதிகளவில் திரட்டிக்கொள்ள முயற்சி செய்ய வேண்டும்.

சமாதானத்தின் பெறுதிகள் என்பது- தனிப்பட்ட மனிதனொருவனின் இயல்பு வாழ்க்கையிலிருந்தே ஆரம்பமாகின்றது என்பதை சரிவரப் புரிந்துகொள்ளும்போது, மேற்படி வேகமான, உடனடி முயற்சிகளின் அத்தியாவசியம் புலனாகும்.

# மன்னார்க் கடலில் பெற்றோலியம்; மறைந்திருக்கிறதா புதையல் வளம்?

இன்று உலகில் பெற்றோலியமே வளைகுடா நெருக்கடிக்கு ஆதாரமாக இருக்கிறது. அந்தப் பெற்றோலியம் எம்மிடமும் இருக்கிறது என்பது கடந்த ஆண்டு முதல் பரபரப்பாக அடிபடும் செய்தி. மன்னார் கடலில் பெற்றோலியம் இருப்பது என்பது தான் அந்தச்செய்தி.

1970களில் பெற்றோலிய பரபரப்பு மன்னாரில் அடிபட்டது. பிரான்ஸ், சீனா, சோவியத்யூனியன் ஆகியன கடலில் கோபுரங்கள் அமைத்து பெற்றோலியத்தைத் தேடின. அதில் பெறப்பட்ட பெறுபேறுகள் வெளியிடப்படவில்லை. சோவியத்யூனியன் பெற்றோலியம் இருப்பதை உறுதி செய்ததாக தகவல் வெளியானது. அது உண்மையா என்பது வெளியிடப்படவில்லை.

ஆனால் பெற்றோலிய ஆய்வில் செய்கோள்களின் திறன் வலுவாகிவிட்ட சூழலில் மன்னார் பெற்றோலியம் மீண்டும் பரபரப்பை தோற்றுவித்துவிட்டது. தொலை உணர் செய்கோள்கள் **(Remote Sensing Satellites)** புவி அக வளங்களை இனங்கண்டு வெளிவருவதில் திறன் பெற்றவை. இந்தியா- தொலை உணர் செய்கோள்களை செலுத்தி அவற்றின் மூலம் தன் பிராந்திய புவியகவளங்களை இனம் காண்பதில் கூடுதல் அக்கறை கொண்டது. அந்தவகையில் மன்னார் வளைகுடாவுக்கு மேற்கே உள்ள தமிழக நிலப்பரப்புக்கள், கரையோரங்களில் பெற்றோலியம் இருப்பதை இந்தியா-உறுதி செய்தது. மன்னார் வளைகுடாவுக்கு வடக்கே காவிரி நதி நீர் கழிமுகத்திலும் பெற்றோலிய வளம் கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றது.

அதேபோல் மன்னார் கடல் எல்லைக்குள்ளும் பெற்றோலிய வளம் இருப்பதாக இந்தியா கடந்த ஆண்டில் தகவல் வெளியிட்டது. ஆயினும் அதற்குரிய இடங்களைக் குறிகாட்டி அது தகவல் வெளியிடவில்லை.

இதற்கிடையில் சிறீலங்காவின் முன்னாள் பிரதிப் பாதுகாப்பு, எரிபொருள், சக்திவள அமைச்சர் ரத்வத்த- மன்னார் கடலில் பெற்றோலிய வளத்தினை கொண்ட இடங்களை அவுஸ்ரேலிய நிறுவனம் ஒன்றைக் கொண்டு அறியவும், அமெரிக்காவின் பெற்றோலிய அகழ்வு நிறுவனம் ஒன்றுக்கு வழங்கவும் தயார் செய்தார்.

இதற்கிடையில் அவர் காலம் கழிந்தது. நோர்வே இந்த பெற்றோலிய தேடலை மேற்கொள்ளப் போவதாக தகவல் வெளியானபோதும் - அதன் வளர்ச்சி பற்றிய விபரங்கள் இல்லை.

அது அல்லாமல் போகட்டும். நாங்கள் மன்னாரில் பெற்றோலியம் எப்படி வரும் என்ற சாத்தியக்கூறையும் ஆராய வேண்டும். மன்னார் ஒரு குறுகிய கடல். ஒருபக்கம் தமிழகம், மறுபக்கம் மன்னார். தமிழகத்தின் காவிரியும், தமிரபரணியும், மன்னாரின் அருவி ஆறும் மண்வளத்தை அதிகளவில் கொண்டு சேர்க்கும் கடல் மன்னார்தான்.

இந்த வகையில் மன்னாரின் கடலில் பெற்றோலிய வளம் இருக்க வேண்டியதன் காரணம் குறித்த சாத்தியக்கூறை தருகிறார் இ.லதா ரஞ்சினி. இவர் ஒரு புவியியல் சிறப்புப்பட்டதாரி. இவருடைய சாத்தியக்கூறு ஆய்வுப்பகுதியைப் பார்ப்போம்.

பெற்றோலியம் எவ்வாறு உருவாகின்றது என்றால் "பல கோடி ஆண்டுகளுக்கு முன் கடலினுள் வாழ்ந்த உயிரினங்கள்

## தவா


மண்ணினுள் புதையுண்டு இராசயன மாற்றங்களுக்கு உள்ளாகி பெற்றோலியமாக திரிபடைகின்றன." அதனால் தான் பெற்றோலியமானது உயிர்வலுக்களுடன் கூடிய அடையற்பாறைகளில் காணப்படுகின்றது.

இதனை அடிப்படையாகக் கொண்டு நோக்குகையில் இன்றைய கண்ட ஒழுங்குகள் ஆரம்ப காலத்தில் காணப்படவில்லை. அதாவது புவி தோற்றம் பெற்ற காலவேளையில் கண்டங்கள் எவ்வாறு காணப்பட்டன என்பதற்கு ஆதாரங்கள் இல்லை எனினும் புவிப் பௌதீகவியல், புவிச்சரிதவியல் ஆய்வுகளின் படி பஞ்சியா என்ற நிலத்திலிருந்து இன்றைய கண்டத் தொகுதிகள் தோற்றம் பெற்றன. பஞ்சியா என்ற நிலத்திணிவு 180 மில்லியன் வருடங்களுக்கு முன்இரு தொகுதிகளாகப் பிளவுபட்டது. வட பகுதி(லொறேசியா) அங்காரலாந்து என்றும் தென்பகுதி கொண்டுவானாலாந்து எனவும் அழைக்கப்பட்டது. பின்னர் கொண்டுவானாலாந்து - மேலும் அந்தாட்டிக்கா, அவுஸ்திரேலியா, ஆபிரிக்கா, தென்னமரிக்கா இந்தியா எனவும், அங்காரலாந்து- வடஅமெரிக்கா, ஐரோப்பா, ஆசியா கண்டங்களாகவும் பிளவுபட்டன. இவ்வாறு பிளவுபட்ட கண்டச்சிதறல்கள் நகர்த்தப்பட்டு இன்றைய நிலையைப் பெற்றன.

இந்நகர்வின்போது ஒவ்வொரு கண்டங்களும் அமைவு பெற்றன. இவ்வேளை இந்தியாவுடன் இலங்கை (யுறாசிக் காலம்) ஒட்டியிருந்தது. பின்னர் ஏற்பட்ட தோற்ற மாற்றப் பிளவுகள் காரணமாக அதாவது கிறிட்டேரியன், பலியோசின், ஒலியோசின் காலங்களில் ஏற்பட்ட கண்டநகர்வின்போது முதலில் தென்கிழக்குத்திசை நோக்கியும் பின்னர் வடக்குத் தெற்காகவும் பின்னர் தென்மேற்கு நோக்கியும் நகர்வுகள் ஏற்பட்டு இலங்கை தனித்தீவாக தோற்றம் பெற்றது.

இவ்வாறு தனித் தீவாக தோற்றம் பெற்ற இலங்கையும், இந்தியாவும் ஒரே கண்ட மேடை, ஒரே கல்லியல் அமைப்பு, ஒரே அடித்தளப்பாறை, ஒரே வகையான பாறைப் போக்கு, ஒத்த மண்வகைகைகள், ஒத்த பிளவுக் கோடுகள் என்பவற்றில் ஒற்றுமைப்பட்டுக் காணப்படுகின்றன.

180 மில்லியன் வருடங்களுக்கு முன் கண்டங்கள் ஒன்றாக காணப்பட்டு இன்று இந்நிலையை அடைந்தாலும் புவிச்சரித




வியல் ரீதியில் கண்டங்களுக்கும், நாடுகளுக்கும் இடையில் தொடர்புகள் அதிகமுள்ளன.

இதனைக்கொண்டு நோக்குகையில்- உலகில் பெற்றோலிய வளம் கூடுதலாக ரஷ்யா, அமெரிக்கா (மத்திய கிழக்கு நாடுகள்) சவுதியரேபியா, ஈரான்,வெனிசுவெலா, ஈராக், குவைத் போன்ற நாடுகளில் காணப்படுகின்றன. மேலும் தென்கிழக்காசியாவில் இந்தோனேசியா, [illegible]த்திரா, யாவா,போர்ணியா, இந்தியா (அசாம், குஜராத்) போன்ற இடங்களில் காணப்படுகின்றது.

எனவே ஒன்றாக இருந்து பிரிந்த வேளைகளில் நாடுகள் புவிச்சரிதவியல் அமைப்புக்கு ஏற்பவே பெற்றோலியம் உண்டாயிற்று. இவ்வாறு பெற்றோலியம் காணப்படும் இடங்கள் எல்லாம் உயர்வலுக்களுடன் கூடிய அடையற் பாறைகளாக உள்ளன.

இதே போலவே இலங்கையின் வடமேற்குப் பகுதி (சுண்ணக்கல்லைக் கொண்ட) அடையற் பாறைகளைக் கொண்டுள்ளது. இதிலேயே மன்னார் பகுதியில் பெற்றோலியம் இருப்பதாக ஆய்வுகள் கூறுகின்றன.

இங்கு பெற்றோலியம் இருப்பதற்கான புவியியல் காரணிகளை நோக்கின்,

முதலாவதாக இங்குள்ள பாறை அடையற்பாறை என்பதைக் கூறமுடியும். அடுத்ததாக இப்பிரதேசத்தின் கரையோரமாக மன்னார்க்கடல் காணப்படுகின்றது. இக்கடல் பல்வேறு உயிரினங்கள் வாழக்கூடிய ஆழமற்ற கண்டமேடைகளைக் கொண்டுள்ளது. இதனால் இக்கடற்பரப்பில் அதிக தொகையான உயிரினங்கள் வாழ்ந்து மண்ணுள் புதையுண்டிருக்காலம்.

மேலும் இந்திய- இலங்கைக் கடற்பரப்பில் பெற்றோலியம் இருப்பதாக ஆய்வுகள் கூறுகின்றன. இவ்விந்திய- இலங்கைக் கடற்பரப்புக்கு அண்மையிலேயே மன்னார் அமைந்திருப்பதால் இப்பிரதேசங்களின் அடித்தளப்பாறைகளில் ஒற்றுமை இருக்கலாம்.

மேலும் பம்பாய் கடற்பரப்பிலும் பெற்றோலிய வளம் காணப்படுவதாக ஆய்வுகள் கூறுகின்றன.

இவற்றைக் கொண்டு நோக்குகையில் இலங்கையும் இந்தியாவும் ஒட்டியிருந்து, பின்னர் பிரிந்தமையால் இரண்டு நாட்டுக்குமிடையே காணப்படும் கடற்பரப்புத்தூரம் மிகக் கிட்டியதாகும். (மன்னாருக்கு)

எனவே புவியியல் ரீதியில் நோக்கும் போது இங்கு பெற்றோலிய வளம் இருப்பதற்கான சாத்தியங்களில் பெரும்பாலானவை பெற்றோலியம் இங்கு உள்ளது என்பதைக் கூறிக்கொள்ள முடிகிறது. இது மன்னாரில் பெற்றோலியம் இருப்பதற்கான சாத்தியக் கூறு ஆகும்.

இதற்கிடையே அம்பாறைக்கு தென்கிழக்கில் கூட பெற்றோலிய வாய்ப்பு அடையற் கடற்பகுதியில் கண்டு பிடிக்கப்பட்டு இருக்கின்றது. இது சர்வதேசக் கடற்பரப்பில் இருக்கிறது. யாருக்கு இது சொந்தமானது என்ற வாதப் பிரதி வாதங்கள் வேறு இங்கு நடக்கின்றன.

# மீளவும் சொந்த இடம் திரும்பும் வசாவிளான் ம. ம. வித்தியாலயம்

## ஆரம்ப நிகழ்வு இன்று

(ஊரெழு)

வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தை சொந்த இடத்தில் மீண்டும் இயங்குவதற்கான ஆரம்பநிகழ்வு விஜய தசமிதினமான இன்று நடைபெறவுள்ளது.

இடம்பெயர்ந்து உரும்பிராயில் இயங்குகின்ற இக்கல்லூரி சொந்தஇடத்தில் இயங்குவதற்கு அனுமதிக்கப்பட்டதை அடுத்து, கட்டம்கட்டமாக திருத்த வேலைகளும், துப்பரவுப் பணிகளும் இதுவரை நடைபெற்று வந்தமை குறிப்பிடத்தக்கது.

(96)

# உயிரிழந்தோரின் உறவினரின் நலன் பேண ஏற்பாடு!

(நமது நிருபர்)

காஞ்சிரங்குடா விசேட அதிரடிப் படையினரின் தாக்குதலில் உயிரிழந்தோரின் குடும்பங்களின் நலனைக் கவனிக்க மனித உரிமைகளுக்கும் அபிவிருத்திக்குமான நிலையம் ஏற்பாடு செய்துள்ளது.

இக்கொலைகள் தொடர்பான நீதிமன்ற விசாரணைகள் அக்கரைப்பற்று நீதிமன்றத்தில் நடைபெறவுள்ளது. கொல்லப்பட்டவர்களின் உறவினர்களைச் சந்தித்துப் பேசிய மனித உரிமைகளுக்கும் அபிவிருத்திக்குமான நிலையத்தின் பிரதிநிதிகள் இந்த உறுதிமொழியை வழங்கியுள்ளனர்.

# இலங்கையில் தொழிலாளர் எழுச்சியை சிங்கள இனவாதம் விழுங்கிய கதை!

## சுயநிர்ணயம் — ஓர் பார்வை பகுதி 03

### வேலும்மயிலும் சேந்தன்

சர்வதேச அரங்கு- 1917அக்டோபர் புரட்சியின் பின்னர் முதலாளித்துவ முகாம், சோசலிச முகாம் என இரு வகைப்பட்ட அணிகளையும்- முறையே அவற்றுக்குரிய தத்துவங்கள், கொள்கைகள், மற்றும் இராணுவங்களையும் கொண்டமைந்த இரு துருவ சர்வதேச அரசியல்-இலங்கையில் எவ்வாறு இனவாதச் சிந்தனைகளுக்கும் அதன அரசியல் மற்றும் இராணுவ முன்நகர்த்தலுக்கும் வழிகோலின என்பதனை ஆராய்வதே இப்பகுதியின் நோக்கமாகும்.

இன்று இலங்கையின் இனத்துவ நெருக்கடிகளுக்கு தீர்வு காணும் நோக்கில் இலங்கைத் தமிழ்தரப்பால முன் வைக்கப்படும் 'தமிழர்களின் சுயநிர்ணயம்' என்பதற்கு வலுச் சேர்க்கும் முகமாக, அன்றைய இரு துருவ சர்வதேச அரசியல் வியூகம் எவ்வாறு இலங்கைத்தமிழரை பாதித்தது என்பதனை இங்கு முதன்மைப்படுத்த இன்றைய கட்டுரையின் இப்பகுதி முயலும்.

இந்தவகையில் - இலங்கைத் தொழிலாளர்களின் ஒற்றுமையை லெனினது சர்வதேச பட்டாளிகள் சமூகத்திற்கு சமாந்தரமான நேர் கோட்டில் இணைத்துப் பார்க்கும் இடத்து, இலங்கை தொழிலாளர் இயக்க வரலாற்றில்- இன, மத, உணர்ச்சிகளுக்கு மேலாக வர்க்க உணாவு மேலாண்மை பெற்றிருந்த ஒரு கால கட்டம் இருந்தது.

19ஆம் நூற்றாண்டின் பெருந் தோட்டத்துறை எழுச்சியுடன் இலங்கையில் முதலாளித்துவம் வளர்ச்சியடையத் தொடங்கியது. அவ் வேளையில் தொழிலாளர் வர்க்கத்




தில் சிங்களவர், இலங்கைத் தமிழர், இந்தியத் தமிழர், மலையாளிகள், முஸ்லீம்கள், பறங்கியர் போன்ற பல்லினத்தவரும் காணப்பட்டனர்.

இவ்வாறான பல்லின பன்முகத் தன்மைகளுக்கு அப்பால் 'தொழிலாளர் வர்க்கம்' என்பதற்கு அணி சேர்க்கும் அம்சங்களான- குறைந் தளவான சம்பளம், நீண்ட வேலை நேரம், மோசமான வேலைச்சூழல், பொதுவான ஒடுக்கு முறைகள் என்றரீதியில் 'சுரண்டப்படும் தொழிலாளர்' என்ற உணர்வு எல்லா இனத்தவரிடமும் காணப்பட்டது.

இவ்வாறான வர்க்க குணாம்சம் - இலங்கையில் 1890இல் இடம் பெற்ற முதலாவது தொழிலாளர் வேலைநிறுத்தத்திலிருந்து,1930 ஆம் ஆண்டுகளில் காணப்பட்ட உலகப்பொருளாதார மந்தநிலை வரையான கால கட்டம் வரை மேலோங்கி இருந்தது என்று கூறினாலும், மிகநுணுக்கமாகப் பார்க்குமிடத்து 1920களுடன் இவ் வர்க்க குணாம்சம் இலங்கையில் அற்றுப்போனதையும் நோக்கமுடியும்.

இந்த இடத்தில் சர்வதேச அரங்கிற்கு நாம் உடன் சென்று பார்ப்போமாயின்-1893 செப்ரெம்பர் 14ஆம் திகதி தொழிலாளர் இயக்கத்தில் பிரெடெரிக் எங்கேல்ஸின்- 50 வருட கால சேவையைப் பாராட்டி வியன்னாவில் எடுக்கப்பட்ட விழாவில், அவர் உரையாற்றுகையில்- "எனது சேவைக்கான அதி உயர்ந்த பரிசு சைபீரிய சிறைச்சாலைகளிலிருந்து- கலிபோர்ணியாவின் தங்கச் சுரங்கங்கள் வரை, அவுஸ்திரேலியா போன்ற மிகத் தூர இடங்களுக்கும் பூமியின்




மகா முதலியார் சொலமன் டயஸ் பண்டாரநாயக்காவும் அவரது மனைவி மற்றும் பிள்ளைகள்.

நாலா பக்கங்களிலும் தொழிலாளர் இயக்கம் பரவியது தான்" எனக் கூறினார்.

இந்த வகையில் சர்வதேச பாட்டாளி வர்க்கத்தின் விழிப்புணர்வு - இலங்கையிலும் இருந்தது என்றால் அது மிகையல்ல.

இந்த வகையில் 1893இல் இடம் பெற்ற அச்சுத் தொழிலாளர் சங்க வேலைநிறுத்தம், சலவைத்தொழிலாளர் வேலை நிறுத்தம்(1896), யாழ்ப்பாணச் சுருட்டுத் தொழிலாளர் வேலைநிறுத்தம்(1896), 'டைம்ஸ் ஒவ் சிலோன்' அச்சுத்தொழிலாளர் வேலைநிறுத்தம்(1898), இலங்கைத் துறைமுகத்தொழிலாளர் வேலை நிறுத்தம்(1901) மற்றும் தீவிரமாக நடந்த மாட்டுவண்டில்காரர் நடாத்திய வேலைநிறுத்தம்(1906) ஆகிய இந்தக்காலகட்டத் தொழிலாளர் போராட்டங்களில் இலங்கையில் இனத்துவம் முதன்மை பெறாது, வர்க்ககுணாம்சம் முனைப்புற்றிருந்ததை எடுத்துக் காட்டுவனவான வாகும்.

1912இல் நடைபெற்ற ரயில்வே தொழிலாளர் வேலைநிறுத்தம் நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளை செயலிழக்கச்செய்தது. சகல இனங்களையும் சேர்ந்த- மத்திய தர வர்க்கத்தினரின் ஒத்துழைப்பு இப்போராட்டத்திற்கு கிட்டியது .

இந்த வகையில்- ரயில்வே தொழிலாளர்களின் கஷ்டங்கள் குறித்து விசாரிப்பதற்கு நியமிக்கப்பட்ட ஆணையாளர்களில் ஒருவராகிய பொன்னம்பலம் அருணாசலம்- தொழிலாளர்களின் சம்பள உயர்வுக் கோரிக்கையை தீவிரமாக ஆதரித்து அறிக்கையொன்றை வெளியிட்டார். அதில் "உலகப் பாட்டாளி வர்க்கத்தினிடையே வளர்ந்து வரும் விழிப்புணர்வின் அலையால் இலங்கை பாதிக்கப்படாது இருக்குமென எதிர்பார்க்க முடியாது" என அவர் குறிப்பிட்டார்.

இதனை இங்கு நோக்கும்போது இரு துருவ சர்வதேச அரசியல் சூழலமைவு எவ்வாறு இலங்கையை பாதித்தது என்பது இங்கு கூர்ந்து நோக்கத்தக்கதாகும்.

இதேவேளை- இலங்கையில் பொன்னம்பலம் அருணாசலத்தின் அரசியல் சமுக மற்றும் கலாசார சீர்திருத்தங்களில் வகிபாகம் (Role) தவிர்க்க முடியாதபடி முதன்மை பெற்றிருந்தாலும் - வர்க்க அரசியலாலும், இனவாத அரசியலாலும் ஏமாற்றப்பட்ட மனிதர் என்ற வகையில் அந்தத் தனிமனிதனுக்கு நடந்த துரோகத்தனம் ஒரு நாட்டின் ஒரு தேசிய சிறுபான்மை இனத்துக்கே நடந்தாக வரலாற்றுப் பாடத்தினை எமது அரசியல் வரலாறு கற்றுத் தந்துள்ளமையும் நாம் இங்கு கவனிக்க வேண்டும்.

அருணாசலம் உழைப்பாளர்களை முதன்மைப்படுத்துவதில் எப்போதும் ஆர்வம் காட்டினார். தோட்டங்களைவிட்டு அகலும் பெருந் தோட்டத் தொழிலாளர்கள் மீது ஒப்பந்த முறிவுக்காக நீதிமன்றங்களில் வழக்குத் தொடுத்து மீண்டும் அவர்களை அதே தோட்டத்திற்கு திரும்பவும் உழைக்க ஆவன செய்தார்.

இதன் பிரகாரம் 1865 ஆம் ஆண்டு "எசமான்-பணியாள்" சட்டத்தின் அநீதிகளைச் சமுகச் சேவைச்சங்கம் மூலம் தொடர்ந்து எதிர்த்து வந்தார்.

ஆனால்-அருணாசலம் தொழிலாளர்களைப் பற்றிக்கூறுமிடத்து "ஏழையாகவும், அறிவற்றவனாகவும், உதவியற்றவனாகவும் இருக்கும் தொழிலாளி வேலைக்குச் சேர்ப் போனினதும் முதலாளியினதும் கொடுங்கோண்மையிலிருந்து தனனைக் காப்பாற்ற முடியாதுள்ளான்" எனக் குறிப்பிட்டமையை வைத்துக் கொண்டு அவரை ஒரு கம்யூனிச வாதியாக கூறிவிடமுடியாது.

ஆனால்- சர்வதேச அரசியல் அரங்கையும் அதன் போக்கையும் அவர் நன்கு விளங்கியிருந்தார் என்பது இங்கு வெள்ளிடைமலையாகும்.

இந்தக்காலகட்டத்தில் இலங்கைத் தொழிலாளர் இயக் கத்தில்- பொதுவாக ஆய்வாளர்களினால் முன் வைக்கப்படும் தொழிற்சங்கவாதியான **A.E.** குணசிங்கவினது வகிபாகம் **(Role)** பற்றி எடுத் துக்கூறுமளவிற்கு - பொன்னம்பலம் அருணாச்சலத்தினை ஆய்வாளர்கள் எவரும் எடுத்தியம்புவதில்லை என்பதும் இங்கு குறிப்பிட வேண்டிய விடயமாகும்.

1922இல் சமூக ஜனநாயக வாதியான **A.E.**குணசிங்காவின் தலைமையில் இலங்கைத் தொழிற்சங்கம் உருவாகியது. இவ் வாறான அமைப்பு மூலம்- இலங்கைத் தொழிலாளர் வர்க்கத்திற்கு முதல் தடவையாக ஒரு முழு நேரத் தலைமை கிடைத்தது என்பது மிகவும் முக்கியமான ஒரு அம்சமாகும்.

இந்தவகையில் - தொழிற் சங்கத்தின் பல்லினத் தன்மையை அதன் தலைமைத்துவம் பிரதிபலித்தது. **A.E.**குணசிங்கவுடன் **C.H.Z.** பெர்ணான்டோ, ஜோர்ஜ் ஈ.டி.சில்வா, விக்டர் கொரியா போன்ற தலைவர்களுடன் - இலங்கைத் தமிழர்களான **A.B.**தம்பிஐயா, ஜேம்ஸ் ரத்தினம், கே.நடேசஐயர் ஆகியோரும் **M.L.M.** றியாஸ், **M.N.N.**ஹனிபா, காசிம் இஸ்மாயில் போன்ற முஸ்லிம் தலைவர்களும் இணைந்து செயற்பட்டனர்.

இந்தவகையில் **A.E.**குணசிங்க உலக பொருளாதார நெருக்கடியை தர்க்கரீதியாக விளங்கிக் கொண்டாரோ தெரியவில்லை. ஆனால். அதற்குப் பதிலாக சிங்கள தொழிலாளரின் பாதிப்புக்களுக்கு- மலையக இந்திய தொழிலாளர்களே காரணம் என்று கூறியதும், இந்திய தொழிலாளர்களுக்கு மாறாக செயற்பட்டதும், அதனைத் தொடர்ந்து தொழிற்சங்கவாதியான கே.நடேச ஐயரின் வெளியேற்றமும் இலங்கையில் வர்க்க அரசியல் தோற்று, இனவாத அரசியல் உருவாவதற்கு அடிகோலின.

இதன் தொடர்ச்சியாக - மலையக மக்களின் வாக்குரிமை பறிப்பும், அதனூடாக இலங்கையில் இடதுசாரி அரசியலின் எழுச்சியும் மங்கியது. இரு துருவ சர்வதேச அரசியலுக்கு ஏற்ப இலங்கையின் இடதுசாரி எழுச்சியை முடக்கி, ஏகாதிபத்தியத்தின் முதலாளித்துவ அணியும் தரகு முதலாளித்துவமும் இலங்கையில் நிலைகொள்ளவும், செல்வாக்குப் பெறவும் தொடங்கின.

எது எவ்வாறாயினும் 1930களில் உருவாகிய உலகப் பொருளாதார மந்த நிலையும், 1931இல் இலங்கையில் ஏற்படுத்தப்பட்ட டொனமூர் அரசியல் திட்டமும் இனவாத அரசியலுக்கு மகுடம் இட்டன.

இதற்குப் புறம்பாக 1919இல் பொன்னம்பலம் அருணாச்சலத்தின்



முன்னைய பாராளுமன்ற முன்றலில் நிறுவப்பட்டுள்ள அருணாச்சலம் அவர்களின் உருவச்சிலை

தலைமையிலான இலங்கைத் தேசிய காங்கிரசின் உருவாக்கமும், அதனைத் தொடர்ந்து பிரித்தானியாவின் பிரித்தாளும் தந்திரத்திற்கு அமைவாக இடம்பெற்ற அதன் உடைவும், அருணாச்சலத்தின் வெளியேற்றமும் தொடராக நடைபெற்றன.

இதனைத் தொடர்ந்து - 1921 செப்டெம்பர் மாதத்திலிருந்து- "இலங்கைத் தமிழர் சீர்திருத்தக் கழகம்" என்ற கழகத்தை அருணாச்சலம் ஆரம்பித்து வைத்தார்.

அங்கு நிகழ்த்திய அங்குரார்ப்பண உரையில் - "நாம் இலங்கையர் என்பதற்குப் பதிலாக தமிழர் என்பதனை முதன்மைப்படுத்தி அரசியல் வேலைகளில் ஈடுபட வேண்டும் என்று அவர் குறிப்பிட்டமை - இலங்கைத் தமிழரின் அரசியலில் எதிர்காலத்தில் வரவிருக்கும் அனைத்து வரலாற்றுத் தொகுப்புக்களும் கட்டியம் கூறுவதாகவே அமைந்தது.

இதற்குச் சமாந்தரமாக - 1918 டிசம்பரில் யாழ்ப்பாணச் சங்கத்திற்கு - அரச கழகத்தில் மேல். மாகாணத் தொகுயில் தமிழருக்கெனப் பிரதிநிதித்துவம் ஒன்றைக் கொடுப்பதாக ஜேம்ஸ் பீரிஸினாலும் **E.J.**சமரவிக்கிரமவினாலும் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகள் ஏமாற்றப்பட்டதும் - இலங்கையில் இனவாத அரசியலின் கால்கோள்களாகும்.

இந்தவகையில் பிரித்தானியாவினது பிரித்தாளும் தந்திரமாக, சர்வதேச இரு துருவ அரசியலுக்கு ஏற்ப - இலங்கையில் 1910இல் சிங்களவர்கள் பெருபான்மையாக இருந்த வாகனப் போக்குவரத்து தொழிலாளர்கள் - ரயில்வேத்துறையில் இந்திய தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்புக்கு எதிர்ப்பு தெரிவித்தனர்.

1913இல் ரயில்வே ஆணையாளரிடம் தங்கள் முறைப்பாடுகளை முன்வைத்த வாகனப் போக்குவரத்து தொழிலாளர்கள் - சிங்களவர்களுக்குப் பதிலாக இந்தியத் தமிழ் மற்றும் மலையாளிகள் முதன்மை பெறுவதாக குற்றஞ்சாட்டினார்கள்

இவ்வேளை இலங்கையின் ஆளுநராக இருந்த சேர்.ரொபேட் சல்மேஸ் 1.7.1915இல் "எதிர்காலத்தைப் பாதுகாத்துக்கொள்வதற்கு ரயில்வேயில் மொத்தமுள்ள 1600 தொழிலாளர்களில் 1000 சிங்களவர் என்றுள்ள தற்போதைய விகிதத்தை கூடிய அளவுக்கு மாற்றியமைப்பது புத்திசாலித்தனமாக இருக்கும்" எனக் கூறியமை - பிரித்தானியாவின் பிரித்தாளும் தந்திரத்திற்கும் உலகின் கம்யூனிசியத் தத்துவத்திற்கும் எதிர் எதிரான நேர்கோட்டுத் தன்மையை எடுத்தியம்புவதாக அமைகின்றது.

இந்தவகையில் - இலங்கையில் தரகு முதலாளித்துவத்தின் முக்கிய செயற்பாட்டுக்கருவியாகிய "வர்த்தக மூலதனம்"- கைத்தொழில் வளர்ச்சியிலோ அல்லது பரந்துபட்ட பொதுவான உற்பத்தியிலோ தங்கி இருக்கவில்லை. மாறாக கொழும்பை மையமாகக் கொண்ட முகவர் நிலையங்கள், வங்கிகள், காப்புறுதிக் கம்பனிகள் என்பவற்றிலே நிலைபெற்றிருந்தது.

இந்தவகையில் ஏகாதிபத்திய மூலதனத்தின் இணைப்புப் பாலமாக இலங்கையின் தரகு முதலாளித்துவத்தின் வர்த்தக மூலதனம் இணைந்து செயற்பட்டது.

சந்தர்ப்பச் சூழ்நிலையின் தவிர்க்க முடியாத அம்சமாக- ஐரோப்பாவில் பரவிய தாராளமய கோட்பாட்டுச் சிந்தனைகளின் விளைவாகவும் ஜனநாயக செயற்பாடுகளின விளைவாகவும் - இலங்கை சர்வசன வாக்கெடுப்பிற்கு டொனமூர் அரசியற திட்டத்திற்கூடாக பிரவேசிக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளானது.

இந்தவகையில் - வாக்களிப்பின் மூலம் பாராளுமன்ற ஆசனங்களைப் பெறவிருந்த இலங்கை உயர் குழாத்தினருக்கு (Elites) சமூக மற்றும் அரசியல் ஒருமைப்பாட்டுணாவுக்கு 'இனவாதம்' என்ற பெருங் கதையாடல் (Bigtalk) தேவைப்பட்டது. அது காலனித்துவ சுதந்திரத்தின் பின்னர் இன்று வரை இக்கதையாடல் சிங்களப் பெரும்பான்மை உயர் குழாத்தினருக்கு அவர்களின் நலன்பேண அவசிய தேவையாகவும் மாறியது.

இவ்வாறு சிங்களப் பெரும்பான்மை உயர் குழாத்தினரால் 'அவசரச் சமையலாக' உருவாக்கப்பட்ட ஐக்கிய தேசிய கட்சியினுள் **D.S.**சேனநாயக்கவின் குடும்ப அரசியலை விலத்தி - அதாவது **D.S.**சேனநாயக்கவின் மகன் டட்லி சேனநாயக்க, மருமகன் சேர்.ஜோன் கொத்தலாவல என்போரின் தலைமையை அகற்ற **S.W.R.D.**பண்டாராநாயக்கவிற்கு 1952இல் இன்னொரு அரசியற் கட்சி தேவைப்பட்டது.

அத்துடன் - மேலும் இனவாதம் தூண்டப்பட்டது. இவையே இன்றைய இன நெருக்கடியின் ஊக்கு விசையாகவும் இருந்தது.

இந்தக் கட்டத்திலிருந்தே இலங்கையின் இன நெருக்கடியானது நிறுவனமயப்படுத்தப்பட்ட சிங்கள பேரினவாதத்தின் ஆற்றல்மிகு தோற்றுவாயாகவும் விளங்க ஆரம்பித்தது.

(பிரதி செவ்வாய் தோறும் தொடரும்)

# தற்போதைய சந்தர்ப்பத்தை கைவிட்டால் நாட்டுக்கு எதிர்காலமே இருக்கமாட்டாது!

## உள்விவகார அமைச்சர் ஜோன் அமரதுங்க பௌத்த குருமாருக்கு சாடல்

(திருகோணமலை)

[illegible] தமிழீழ விடுதலைப் புலிகளுடன் [illegible]ச்சுவார்த்தை நடத்தி சமாதானத்தை அடைவதற்காக தற்போதைய சந்தர்ப்ப[illegible]த்தைப் பயன்படுத்திக் கொள்வதறகு [illegible]ங்கள் தவறுவோமேயானால் எல்லோரும் அழிக்கப்படுவோம். அத்துடன் நாட்டுக்கும் எதிர்காலமென்பது இருக்கமாட்டாது. இவ்வாறு உள்விவகார அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்தார்.



கிழக்கு மாகாண நிலைமைகளை ஆராய்வதற்காக திருகோணமலை மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற மாநாட்டில், பௌத்த பிக்குமார் எழுந்து விடுதலைப் புலிகளையும், தமிழர்களையும் காட்டமாகக் கண்டித்து வார்த்தைப் பிரயோகங்கள் செய்த வேளையில் அமைச்சர் இவ்வாறு அழுத்திக் கூறினார்.

சுற்றுலாத்துறை அமைச்சர் காமினி லொக்குகே, இந்துசமய விவகார அமைச்சர் தி.மகேஸ்வரன், உயர் ராணுவ அதிகாரி மேஜர் ஜெனரல் அன்ரன் விஜேந்திரா ஆகியோரும் இம்மாநாட்டில் கலந்துகொண்டனர்.

கிழக்கின் துறைமுக நகரான திருகோணமலையின் நிலைமைகளை மதிப்பிட்டு வருவதற்காக மேஜர் ஜெனரல் விஜேந்திராவை பிரதமர் அங்கு அனுப்பியிருந்தார்.

இம்மாநாட்டில் ஏராளமான பௌத்த பிக்குகள் கலந்துகொண்டிருந்தனர். ஆனால் தமிழ், முஸ்லிம்களுக்கான பிரதிநிதித்துவம் போதியளவில் இருக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

மாநாட்டின் முடிவில் அமரதுங்க எல்லாத் தரப்பினரின் பிரதிநிதிகளுடன் விடுதலைப் புலிகளின் தரப்புப் பிரதிநிதிகளும் பங்காற்றும் செயலணி ஒன்றை அமைப்பது தொடர்பாக அறிவித்தார். உள்விவகார அமைச்சருக்கும் பிரதமருக்கும், வாரம் ஒரு தடவை இடம்பெறும் கலந்துரையாடல்களுடாக நிலைவர அறிக்கையை அனுப்ப வேண்டும் எனவும் அவர் கூறினார்.

## லெப்.கேணல் விக்டர் கேடயம் ஜோசப் அணி வென்றது

(வவுனியா நிருபர்)

விடுதலைப் புலிகளின் முதலாவது லெப்.கேணல் தரத் தளபதியான விக்டரின் 16ஆவது ஆண்டு நிறைவு தினத்தையொட்டி நடத்தப்பட்ட உதைபந்தாட்டப் போட்டியின் இறுதிப் போட்டிகள் நேற்றுமுன்தினம் மன்னாரில் நடைபெற்றன.

இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியிருந்த சென்.ஜோசப் அணிக்கும் அல்பட்டா அணிக்கும் இடையிலான இறுதிப் போட்டியில் சென்.ஜோசப் அணி 4இற்கு 1 என்ற வித்தியாசத்தில் வெற்றியீட்டியது.

இந்நிகழ்வில் தமிழீழ விடுதலைப் புலிகளின் விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் இன்பன், அரசியல் துறையைச் சேர்ந்தவர்களான பூவிழி, தென்றல்மாறன், நெடுமாறன், அமுதா, மூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டனர்.

## அம்புலன்ஸ் தாக்கப்பட்டதை எதிர்த்து திருமலையில் வைத்தியர்கள் போராட்டம்

(திருகோணமலை)

திருகோணமலைப் பொது வைத்தியசாலை மற்றும் தம்பலகாமம் வைத்தியசாலைகளைச் சேர்ந்த வைத்திய அதிகாரிகள், தாதிமார் மற்றும் ஊழியர்கள் நேற்றுக்காலை ஒரு மணிநேர மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த வெள்ளிக்கிழமை கிளிவெட்டியில் இருந்து திருகோணமலை நகர் நோக்கி வந்துகொண்டிருந்த அம்புலன்ஸ் வண்டி சேதப்படுத்தப்பட்டு சாரதியும், வைத்திய அதிகாரியும் தாக்கப்பட்டதையும் கண்டித்தே இந்த அடையாள மறியல் போராட்டம் நடத்தப்பட்டுள்ளது.

நேற்றுக்காலை 10 மணிமுதல் 11 மணிவரை வைத்திய அதிகாரிகள், ஊழியர்கள் கறுப்புப்பட்டி அணிந்து கொண்டு வைத்தியசாலைக்கு முன்பாக மறியலில் ஈடுபட்டிருந்தனர்.

இதேபோல மூதூர் வைத்தியசாலையிலும் நேற்றுமுன்தினம் அடையாள எதிர்ப்புப் போராட்டம் ஒன்று நடந்தது குறிப்பிடத்தக்கது.





மறியல் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் திருமலை வைத்தியசாலை வைத்தியர்களையும் தாதிமார்களையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: கௌதமன்)

## நீர்வேலியில் விவசாயிகளுக்கான கருத்தரங்கு

(புன்னாலைக்கட்டுவன்)

புன்னாலைக்கட்டுவன் பகுதி விவசாயிகளுக்கான உருளைக் கிழங்குச் செய்கை பற்றிய கருத்தரங்கு நாளை மறுநாள் வியாழக்கிழமை காலை 9 மணிக்கு, ஆயர்கடவை சித்தி விநாயகர் ஆலய முன்றிலில் இடம்பெறவுள்ளது.

உடுவில் விவசாயத் திணைக்களப் போதனாசிரியரால் நடத்தப்படவுள்ள இக்கருத்தரங்கில் சகல விவசாயிகளையும் கலந்து பயன்பெறுமாறு கேட்கப்பட்டுள்ளது. (83)

## கணிப்பீட்டுப் புள்ளியும் சேர்க்கப்படும்

(ஊரெழு)

இவ்வருடம் டிசெம்பர் மாதம் நடைபெறவுள்ள க.பொ.த. சாதரண தரப் பரீட்சைக்குத் தோற்றுவோருக்கான பரீட்சை முடிவுகள் - புதிய முறையில் தீர்மானிக்கப்படவுள்ளது.

பாடசாலை மட்டத்தில் இடம்பெறும் தரம் 10, தரம் 11இற்கான கணிப்பீட்டுப் புள்ளிகளும் இவ் இறுதிப் பரீட்சைப் புள்ளிகளுடன் சேர்த்துக் கணிப்பிடப்பட்டே, பரீட்சை முடிவுகள் வெளியாகும் எனக் கல்வி அமைச்சு அறிவித்துள்ளதாகத் தெரியவருகிறது.

(96)

## வலி.கிழக்கில் பனம் பாத்தி அமைப்பில் மும்முரம்

(உரும்பிராய்)

வலி.கிழக்கில் உரும்பிராய், கோப்பாய், நீர்வேலி போன்ற இடங்களில் - இவ்வருடம் பனம் பாத்தி அமைப்பதில் ஈடுபடுவோரின் எண்ணிக்கை அதிகமாகக் காணப்படுகிறது.

தரைப்பாதை திறக்கப்பட்டதை அடுத்து - தென்னிலங்கையில் இருந்து வரும் உல்லாசப் பயணிகள் புழுக்கொடியலை அதிகளவு கொள்வனவு செய்வதனாலேயே இந்நிலை ஏற்பட்டுள்ளது.

தென்பகுதி மக்கள் பனம் உற்பத்திப் பொருட்களை அதிகளவில் கொள்வனவு செய்யும் இவ்வேளையில் இராணுவத்தினர் பனை, தென்னை வளங்களை அழித்து வருவதும் குறிப்பிடத்தக்கது. (84)


**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

ஹாட்லிக் கல்லூரியின் மூத்த பழைய மாணவரும்,
ஆசிரியரும், பட்டயக் கணக்காளரும்,
சமூக சேவையாளரும், பல்கலைக்கழகப் பேரவை
உறுப்பினருமான

*கலாநிதி அ.சோமசுந்தரம்பிள்ளை (B.A.)*
அவர்கள்

13.10.2002 அன்று யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவின்போது *கௌரவ கலாநிதிப் பட்டம்* பெற்றதைப் போற்றி மகிழ்வடைகின்றோம்.

ஹாட்லிக் கல்லூரி,
பழைய மாணவர் மன்றம்,
பருத்தித்துறை.

(சி-059)



**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

**பேராசிரியர் சுப்பிரமணியம் வித்தியானந்தன்**

**நினைவுப் பேருரை**

காலம் : 15.10.2002 செவ்வாய்க்கிழமை (இன்று) பி.ப. 3 மணி
இடம் : யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கம்

*நினைவுப் பேருரை நிகழ்த்துபவர் :*
கிழக்கிலங்கைப் பல்கலைக்கழக
இணைப் பேராசிரியர் எஸ்.மௌனகுரு அவர்கள்.

*தலைப்பு:*
'ஈழத்தில் தமிழ்க் கூத்தும் கூத்தியல் ஆய்வும்'
*(பேராசிரியர் வித்தியானந்தன் காலம் முதல் ஏற்பட்டுள்ள வளர்ச்சிகள் பற்றிய ஒரு நோக்கு)*

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றேன்.

~ துணைவேந்தர்.

(சி-058)


## இன்றைய நாள் இனிய நாள்

**15.10.2002 - செவ்வாய்க்கிழமை**

**மேடம்** :- மனமகிழ்ச்சி, எடுத்த காரியம் வெற்றி, சக உத்தியோகத்தரின் ஆதரவு, தெய்வ வழிபாடு, கல்விச் சமநிலை, வியாபார முன்னேற்றம்.

**இடபம்** :- சமய விடயம் சம்பந்தமான கலந்துரையாடல், தொழில் முன்னேற்றம், பணவரவு, கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

**மிதுனம்** :- பணவரவு குறைவு, வைத்தியச்செலவு, தொழில் மந்தநிலை, எடுத்த காரியம் தடை, கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

**கர்க்கடகம்** :- பணவரவு, உறவினர் வருகை, விருந்துணவு மகிழ்ச்சி, கல்விச் சமநிலை, வியாபார முன்னேற்றம்.

**சிங்கம்** :- நோய் நீக்கம், கடன்வேண்டிய நிலை, கல்வி முன்னேற்றம், இளைய சகோதர ஆதரவு, வியாபார முன்னேற்றம்.

**கன்னி** :- பணவரவு, புத்திரர் மகிழ்ச்சி, மதியுகத்தால் காரியம் சாதித்தல், கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

யாழ். கொக்குவில் இ.சி.இரகுநாதையர்
அவர்களின் சகோதரரின் புத்திரர்
இ.வெங்கடேச ஐயர்.

**துலாம்** :- வைத்தியச்செலவு, பணவரவு குறைவு, வாகனச்செலவு, அயல் உறவு பேணப்படல் வேண்டும், கல்வியில் ஊக்கம் காட்டவேண்டும், வியாபார முன்னேற்றம்.

**விருச்சிகம்** :- தேக சுகம் நன்று, எடுத்த காரியம் வெற்றி, ஆடை ஆபரண பலன், இளைய சகோதரம் ஆதரவு, கல்வி முன்னேற்றம், வியாபாரச் சமநிலை.

**தனு** :- பொருள் வரவு குறைவு, தேவையற்ற வாக்குவாதம், கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

**மகரம்** :- தொழில் திறமை, நூதனமான வேலையில் ஈடுபாடு, கல்வி முன்னேற்ம், வியாபார முன்னேற்றம்.

**கும்பம்** :- பலவிதமான செலவுகள், பணவரவு, மனச்சஞ்சலம், தேவையற்ற பிரச்சினை, திருப்தி குறைவு, கல்வியில் ஊக்கம் காட்ட வேண்டும், வியாபாரச் சமநிலை.

**மீனம்** :- பணவரவு மிகவும் நன்று, மூத்த சகோதர உறவு நன்று, சமய அறிஞர்கள் தொடர்பு, கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# அழிக்கப்பட்ட பல்கலைக்கழக சொத்து புனரமைத்துத்தர மாணவர் உறுதிமொழி

## - நீதிமன்றில் கடிதம் சமர்ப்பிப்பு -

(யாழ்ப்பாணம்)

கடந்த ஜூன் மாதம் ஏழாம் திகதி யாழ்.பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற மாணவர் குழுக்களுக்கிடையிலான மோதலின் போது, சேதமடைந்த பல்கலைக்கழக சொத்துக்களைப் புனரமைத்துத்தர மாணவர் ஒன்றியம் முன்வந்துள்ளது.

பல்கலைக்கழகத்தின் சொத்து மாணவர்களினால் சேதமாக்கப்பட்டமைக்கு எதிராக நீதிமன்றில் தொடுக்கப்பட்ட வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போதே மாணவர் ஒன்றியத்தின் இந்த எழுத்துமூல உறுதிமொழி நீதவானுக்குப் பதிவாளர் ஊடாக தெரிவிக்கப்பட்டது. இம் மோதல் சம்பவத்தில் பல்கலைக்கழகத்திற்கு 1 இலட்சத்து 35 ஆயிரம் ரூபா சொத்திழப்பு ஏற்பட்டுள்ளதாகக் கணிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக 26 மாணவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் இவ்விவகாரம் தொடர்பாக துணைவேந்தருக்கு வழங்கியுள்ள கடிதத்தில் - இம் மோதல் சம்பவத்தில் பெருமளவு மாணவர்கள் சம்பந்தப்பட்டிருப்பதால் தனிப்பட்ட வகையில் எவரையும் இனங்காண முடியவில்லை. எனினும் பல்கலைக்கழகத்தின் சொத்து இழப்பீட்டிலிருந்து விடுபட, அவற்றைப் புனரமைத்துத் தருவதாக உறுதியளித்திருந்தது. இவ் வருட இறுதிக்குள் புனரமைப்புப பணிகளை முடிப்பதாகவும் தெரிவிக்ப்பட்டிருந்தது.

இக்கோரிக்கையை ஏற்றுக்கொண்ட நீதவான் இவ் வருட இறுதிக்கு முன்பாக இரு வாரத்திற்குள் புனரமைப்பு தொடர்பான முழுமையான அறிக்கையைப் பல்கலைக்கழக பதிவாளர் தமக்கு சமர்ப்பிக்க வேண்டும் எனக்கேட்டுக் கொண்டார். நேற்றைய வழக்கு விசாரணையின் போது குற்றஞ்சாட்டப்பட்ட 26 மாணவர்களும் நீதிமன்றுக்கு சமூகமளித்திருந்தனர். (லி)

### உரிமைக்காக....

மன்றை பகிஷ்கரிக்கிறார்கள்.

இந்த ஒன்பது பேருடைய போராட்டத்தையும் நாம் மலினப்படுத்த முடியாது. அதேவேளை- அவர்களது போராட்டம் முஸ்லிம் காங்கிரசின் தலைமைத்துவத்தை பலவீனப்படுத்தவும் கூடாது என்றார்.

### புலிகள்...

விடுதலைப்புலிகள் மீது விதித்துள்ள தடையை நீக்குவதற்கு ஐரோப்பியப் பாராளுமன்றம் அழுத்தம் கொடுக்க வேண்டும் என்றும் மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகள் கேட்டுக் கொண்டனர். இவ்விடயங்களைத் தாம் ஐரோப்பியப் பாராளுமன்ற அமர்வின் போது எடுத்துச் சொல்லவுள்ளதாக மேற்படி பாராளுமன்ற உறுப்பினர்கள் பதிலளித்தனர். (க)

### கெய்ரோ...

தெரியவந்துள்ளது.

இவர் தனது கடிதத்தில் தன்னைப் போல பத்துப்பேர் வரை கெய்ரோ சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகவும் தன்னை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்குமாறும் கேட்டுள்ளார்.

மேற்படி நபர் 1985ஆம் ஆண்டு முதல் காணாமல் போய்விட்டதாகக் குடும்பத்தினர் நினைத்திருந்தது குறிப்பிடத்தக்கது.

கெய்ரோவிலுள்ள அனைவரும் தம்மை வெளிநாடுகளுக்கு அனுப்பிய ஏஜெண்டுகளின் தூண்டுதலின் பேரில் போதைவஸ்துக் கடத்தலில் ஈடுபட்டபோதே கைதானதாக மேலும் தெரியவருகின்றது.

### ஹாட்லிக்குள்...

இதையடுத்து-விடுதலைப் புலிகளின் வடமராட்சி அரசியல்துறை அலுவலகத்தில் பகல் 12 மணியளவில் ஐரோப்பிய யூனியன், பிரிட்டிஷ் எம்.பிக்கள் கலந்துரையாடலொன்றை நடத்தினர்.

இக்கலந்துரையாடலில் வடமராட்சி அரசியல்துறை விசேட பொறுப்பாளர் நிசாந்தன், அரசியல்துறை பிரமுகர் தீபன், வடமராட்சி வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் சி.கணபதிப்பிள்ளை, மாவீரர் துயிலும் இல்ல புனரமைப்புக் குழுவின் செயலாளர் பேபியன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இக்கலந்துரையாடலில் - பொது மக்களது பிரச்சினைகள், விடுதலைப் புலிகளின் அரசியல் நடவடிக்கைகள் பற்றி வெளிநாட்டு எம்.பிக்கள் கேட்டறிந்து கொண்டனர்.

விடுதலைப்புலிகளின் தலைவர் இட்ட உத்தரவுக்கமைய - இராணுவம் துப்பாக்கிச் சூடு நடத்தினாலும், அதனை வாங்கிக்கொண்டு மக்களுடன் இணைந்து அரசியல் நடவடிக்கைகளைச் செய்யத் தாம் தயாராக இருப்பதாகவும் தெரிவித்த விடுதலைப்புலிகள் -

மாவீரர் நினைவு தினங்கள் உள்ளிட்ட உள்ளூர் அரசியல் நடவடிக்கைகளில் புலிகள் ஈடுபடும்போது, அவற்றில் கலந்துகொள்ளும் மக்கள், இராணுவப் புலனாய்வுப் பிரிவினரால் கண்காணிக்கப்படுவதாகவும் வெளிநாட்டு எம்.பிக்களிடம் தெரிவித்தனர். (23)

### இராணுவ...

ஈவன்சனை, பிரிட்டிஷ் பாரளுமன்ற உறுப்பினரான ஹரத் தோமஸ், பிரிட்டனிலுள்ள 'ஹரோ' பகுதிக்கான கவுன்சிலர் தயா இடைககாடர், லண்டனைச் சேர்ந்த பத்திரிகையாளர் சேதுரூபன் ஆகியோர் நேற்றுக்காலை வடமராட்சிப் பகுதிக்கு வந்தனர்.

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, மெதடிஸ்த கல்லூரி ஆகியவற்றுக்கு விஜயம் செய்த இக்குழுவினர் பாடசாலைகளைச் சூழ அமைக்கப்பட்டுள்ள இராணுவ முகாம்களையும் காவலரண்களையும், முட்கம்பி வேலிகளையும் பார்வையிட்டனர்.

பின்னர் மெதடிஸ்த கல்லூரியில் - ஹாட்லிக் கல்லூரி அதிபர் ஸ்ரீபதி தலைமையில் நடைபெற்ற மாணவர் கூட்டமொன்றில் கலந்துகொண்டனர்.

இக்குழுவினர் மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றி விரிவாகக் கேட்டறிந்து கொண்டனர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த மாணவர்கள் தாம் சுதந்திரமாகக் கல்வி கற்பதற்கு ஏற்ற சூழல் வேண்டுமென்றும் ராணுவத்தின் முகாமுக்குள் இருந்து தம்மால் கற்றலைத் தொடரமுடியாது எனவும் தெரிவித்தனர்.

இதற்குப் பதிலளித்த ஜரோப்பிய யூனியன் மற்றும் பிரிட்டிஷ் பாராளுமன்ற உறுப்பினர்கள் - யாழ்ப்பாணத்தின் முன்னணிப் பாடசாலைகள் இரண்டு ராணுவ முகாமுக்குள் இருப்பதை ஏற்றுக்கொள்ள முடியாதென்றும் இவ்விடயம் தொடர்பாக ஜரோப்பிய யூனியனிலும், பிரிட்டிஷ் பாராளுமன்றத்திலும் பேசி நடவடிக்கை எடுக்கவிருப்பதாகவும் தெரிவித்தனர்.

இராணுவத்தின் உயர்பாதுகாப்பு வலயங்கள் பற்றி தம்மால் புரிந்து கொள்ள முடியாமலிருப்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர். (23)

### இராணுவத்துக்கு...

ராணுவ முகாம்களில் நடைபெறும் நேர்முகப்பரீட்சைக்குச் சமுகமளித்து ராணுவத்தில் தம்மை இணைத்துக் கொள்ள முடியும் எனப் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

### அதி உயர்...

காப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்ட பிரதேசங்கள் குறித்துக் கலந்துரையாடப்பட்டது.

இக் கலந்துரையாடலின்போது யாழ்.மாவட்ட வரைபடத்தில் உயர் பாதுகாப்பு வலயம் குறித்துக் காட்டப்பட்ட பகுதிகளை யாழ்.மாவட்ட துணை இராணுவத் தளபதி சுட்டிக் காட்டி விளக்கமளித்தார். மேற்படி வரைபடத்தின் படி உள்ள உயர் பாதுகாப்பு வலயங்களில் மாற்றம் செய்து அவற்றைக் குறைத்துக் கொள்வதற்கான சாத்தியக்கூறுகள் பற்றி பிரஸ்தாபிக்கப்பட்டது. மேற்படி வரைபடத்தின் படி, யாழ்.குடாநாட்டின் மொத்த நிலப்பரப்பில் 35 வீதமான நிலப்பரப்பு இவ்வாறு உயர் பாதுகாப்பு வலயங்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டிருப்பது தெரியவந்தது. எனினும் இது 35 வீதத்திலும் குறைவானதே என்று இராணுவத்தரப்பில் வலியுறுத்தப்பட்டது.

மேலும் - இவ்வாறான உயர்பாதுகாப்பு வலயங்களுக்குள் பாடசாலைகள், பொதுமக்களின் குடியிருப்புக்கள் போன்றவை சிக்குப்பட்டுள்ளனவா என்பது குறித்து அறிந்து கொள்வதில் மேற்படி பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆர்வம் செலுத்தினர். யாழ். மாவட்ட துணை இராணுவத் தளபதி தரப்பில் கருத்து தெரிவிக்கப்படும்போது - தற்போதுள்ள அனைத்து உயர்பாதுகாப்பு வலயங்களும் மிகவும் அவசியமானவையே என்றும் இவற்றை அகற்ற முடியாதுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (க)

# கிழக்குப் படுகொலை விசாரணை 21ஆம் திகதி அக்கரைப்பற்றில்

(கொழும்பு நிருபர்)

கிழக்குப் படுகொலைகள் பற்றிய விசாரணைக்காக நியமிக்கப்பட்டிருக்கும் ஓய்வுபெற்ற விமானப்படைத் தளபதி எயர் மார்ஷல் ஹரிகுணதிலக தலைமையிலான குழு, வரும் 21ஆம் திகதி தனது விசாரணையை அக்கரைப்பற்றில் ஆரம்பிக்கவுள்ளது.

25ஆம் திகதி வரை தொடரும் - இந்த விசாரணைகள் பற்றிய அறிக்கை 26 ஆம் திகதி கொழும்பில் வைத்து வெளியிடப்படவுள்ளது.

இக்குழுவில் - ஹரிகுணதிலகவுடன், ஒலிவர் ரணசிங்க மற்றும் சாமித்தம்பி விவேகானந்தன் ஆகியோர் அங்கம் வகிப்பது தெரிந்ததே.

# திருமலைப் படுகொலைகளை விசாரிக்க விசேட பொலிஸ் குழு!

திருகோணமலையில் நடைபெற்ற தமிழர் படுகொலைகள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்வதற்காக கொழும்பிலிருந்து இரகசியப் புலனாய்வுப் பொலிசாரைக் கொண்ட குழுவொன்று திருமலை சென்றுள்ளது.

ஏழு பேர் கொண்ட இக்குழு வட-கிழக்குப் பிராந்திய பொலிஸ் மா அதிபர் இந்திரா டி சில்வாவின் வழி நடத்தலில் இயங்கும் எனத் தெரிய வருகின்றது.

# திருமலை மக்களுக்கு படையினர் ஒலிபெருக்கி மூலம் நன்றி!

திருமலையில் தமிழ்மக்களுக்கு நன்றி தெரிவித்து - இராணுவத்தினர் நேற்றுப் பகல் முழுவதும் திருமலை நகரப்பகுதியெங்கும் ஒலிபெருக்கி மூலம் அறிவிப்புச் செய்தனர்.

இராணுவ வாகனமொன்றில் நகரின் ஒவ்வொரு தெருக்கள் வழியாகவும் வந்த படையினர் - மூன்று தமிழ் மக்கள் படுகொலையான போதும் அமைதி காத்த தமிழ் மக்களுக்கு தாம் நன்றி தெரிவிப்பதாக அறிவித்தனர்.

# பிரிட்டிஷ் எம்.பிக்கள் இன்று வன்னி பயணம்

(யாழ்ப்பாணம் )

பிரித்தானியப் பாரளுமன்ற உறுப்பினர் மற்றும் ஜரோப்பியப் பாரளுமன்ற உறுப்பினர் ஆகியோர் அடங்கிய குழுவினர் இன்று வன்னிக்கு விஜயம் செய்யவுள்ளனர். வன்னியில் விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வனைச் சந்தித்து கலந்துரையாடவுள்ளனர். (க)

# தவறவிடப்பட்ட அடையாள அட்டைகள்

(நமது நிருபர்)

தவறவிடப்பபட்ட விசேட அடையாள அட்டைகள், தேசிய அடையாள அட்டைகள் சில யாழ். பொலிஸ நிலையத்தில் ஒப்படைக் கப்பட்டுள்ளன.

ஒப்படைக்கப்பட்ட அடையாள அட்டைகளின் விபரம் வருமாறு:

**தேசிய அடையாள அட்டைகள்**

சிவரெத்தினம் மணிபல்லவன் (ஆஸ்பத்திரி வீதி,கொட்டடி), சரவணமுத்து கனகசபை (மல்லாகம் வலி.வடக்கு), கந்தையா சந்திரசேகரா (பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்), கந்தசாமி சுவர்ணலதா (நாவலடி, இமையாணன் மேற்கு, உடுப்பிட்டி), நவரத்தினம் ஆறுமுகசாமி (பிரான்பற்று, சங்கானை வடக்கு), தர்மராஜா நிலோஜன் (சொர்ணவடலி ஒழுங்கை, கொக்குவில் மேற்கு), குமரேசு பொன்னையா கனகலிங்கம் (கொட்டடி, யாழ்ப்பாணம்), சிற்றம்பலம் நல்லம்மா (சந்தாதோட்டம், புலோலி வடகிழக்கு புலோலி), பொன்னையா கசிதா (8ம் யூனிட், தருமபுரம்கிழக்கு), சிவஞானம் தனலட்சுமி (வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம்), தருமலிங்கம் ரவீந்திரன் (சென்.செபஸ்தியார் வீதி, கோண்டாவில் கிழக்கு), நடராசா திருவேலழகன் (வதிரி, கரவெட்டி)

**விசேட அடையாள அட்டைகள்**

மாண்டினஸ் குயின்ரன் குளோறோ (சங்கரப்பிள்ளை வீதி, ஆனைக்கோட்டை), சின்னத்தம்பி சுதாகரன் (ஓட்டுமடம், யாழ்ப்பாணம்), முத்துக்குமாரு நடராஜா (பழையகண்டி, காரைநகர், ஊர்காவற்றுறை), சின்னராசா சதீஸ்வரன் (முருகமூர்த்தி வீதி, வண்ணார்பண்ணை யாழ்ப்பாணம்),விசுவநாதர் தணிகாசலம் (சிவன்கோவிலடி, புத்தூர்மேற்கு), சிற்றம்பலம் நல்லம்மா (கந்தர் தோட்டம் புலோலி வடகிழக்கு, புலோலி), சின்னையா நாகரெத்தினம் (ஆடியபாதம் வீதி,நல்லூர், யாழ்ப்பாணம்),செபமாலை கனிசியஸ் (மெலிஞ்சிமுனை மேற்கு ஊர்காவற்றுறை),சிவக்கொழுந்து நாகராசா (தோப்பு வீதி, மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி), சிங்கராசா பெனடிக்ற் (3ம்குறுக்குத்தெரு, அரசடி ஒழுங்கை, யாழ்ப்பாணம்)

ஆகியோரின் அடையாள அட்டைகள் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. மேற்படி அடையாள அட்டைகளைத் தவறவிட்டோர் தமது அடையாள அட்டைகளை யாழ். பொலிஸ் நிலையத்தில் பெற்றுக்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

அத்துடன் நாவலர் வீதியிலுள்ள 'நமது ஈழநாடு' பத்திரிகைக் காரியாலயத்தில் - சுஜிதா குணபாலசிங்கம் என்பவரின் விசேட அடையாள அட்டையும் தேசிய அ.அட்டையும் (பாலகிரி, மாவிட்டபுரம், தெல்லிப்பளை), சின்னத்துரை கணேசலிங்கம் (அம்மன் கோவிலடி, கோப்பாய் வடக்கு, கோப்பாய்) என்பவரது தேசிய அடையாள அட்டையும் ஒப்படைக்கப்பட்டுள்ளன. மேற்படி அடையாளஅட்டைகளைத் தவறவிட்டோர் எமது காரியாலயத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளவும். (லி)

# திருமலை கள அறிக்கை பிரதமரிடம் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

திருகோணமலையில் நடைபெற்ற படுகொலைச்சம்பவம் தொடர்பான களநிலைவர அறிக்கை ஒன்றை உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க பிரதமமந்திரி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளித்துள்ளார்.

மேற்படி படுகொலைச் சம்பவங்களைத் தொடர்ந்து பிரதமரின் பணிப்பின் பேரில் திருகோணமலைக்கு விஜயம் செய்த உள்துறை அமைச்சர் பல்வேறு தரப்பினருடனும் மேற்படி படுகொலைச் சம்பவம் தொடர்பாக கலந்துரையாடியுள்ளார். இதனைத் தொடர்ந்தே மேற்படி நிலைவர அறிக்கை தயாரிக்கப்பட்டது. இவ் அறிக்கையைப் பிரதமரிடம் கையளித்த அமைச்சர் திருமலையில் நிலவும் ஆகப்பிந்திய நிலைவரம் தொடர்பாகவும் பிரதமருடன் கலந்துரையாடியுள்ளார்.

அதேவேளை இந்துக் கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரனும் மேற்படி படுகொலைச் சம்பவங்களை எப்படித் தடுத்து நிறுத்தியிருக்க முடியும் என்பது பற்றிய ஆலோசனைகள் அடங்கிய அறிக்கை ஒன்றை இன்று பிரதமரைச் சந்தித்து வழங்கவுள்ளார்.

## நாணய மாற்று விகிதம்

இலங்கை மத்திய வங்கியின் சர்வதேச நடவடிக்கைப் பணியகத்தினால் நேற்று வெளியிடப்பட்ட அந்நியச் செலாவணிகளுக்கான நாணய மாற்று விகிதங்கள் தொடர்பான விபரம் வருமாறு

| | கொள்வனவு விலை (ரூ.ச) | விற்பனை விலை (ரூ.ச) |
|---|---|---|
| 1அமெரிக்க டொலர் | 95.99 | 96.42 |
| 1ஸ்ரேலிங் பவுண் | 149.69 | 150.97 |
| 1யூரோ | 94.59 | 95.66 |
| 1சுவிஸ் பிராங் | 64.50 | 65.48 |
| 1அவுஸ்ரேலிய டொலர் | 52.09 | 53:04 |
| 1ஜப்பானிய யென் | 00.77 | 00.78 |
| 1சவூதி றியால் | 25.67 | 25.67 |

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 15.10.2002 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.